www.tamilarangam.net

அன்பளிப்பு 20 p

# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் பத்திரிகை

21.02.1992

### வர்த்தகர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

யாழ் குடா மீதான இராணுவ நடவடிக்கைகளுக்கு முன்னெடுப்பு வேலைகள் நடைபெறுவதைக் கண்டித்து யாழ். நகரில் வர்த்தக சங்கங்களில் ஒன்றியம் எதிர்ப்பு ஊர்வலமொன்றை நடத்தியது. வலிகாமம், நல்லூர், தென்மராட்சி, வடமராட்சி பகுதிகளில் இருந்து பெருமளவான வர்த்தகர்கள் கலந்து கொண்ட இவ் ஊர்வலத்தில் உணர்ச்சி பூர்வமான கோஷங்கள் எழுப்பப்பட்டன. ஊர்வலம் யாழ். செயலகத்தை அடைந்ததும், அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றை வர்த்தகப்பிரமுகர்கள் கையளித்தனர்.

### கெலிக்கப்டரிலிருந்து துண்டுப்பிரசுரம்

# வீடுகளை விட்டு வெளியேறி கோவில்களில் தஞ்சமடைய மக்களுக்கு பணிப்பு!

## எந்நேரமும் பெரும் மோதல் வெடிக்கலாம்

## விடுதலைப்புலிகள் தயார் நிலையில்

**யாழ். குடாநாட்டிலுள்ள மக்களை வீடுகளை விட்டு வெளியேறி கோவில்களில் தஞ்சமடையுமாறு சிறீலங்கா இராணுவத்தினர் கெலிக்காப்டர்களிலிருந்து துண்டுப் பிரசுரங்களை வீசியிருப்பதாக யாழ்ப்பாணத்திலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. எந்நேரமும் பெரும் மோதல் வெடிக்கலாம் என்ற எதிர்பார்ப்புடன் விடுதலைப்புலிகள் தயார் நிலையில் இருப்பதாகவும் மக்களும் இராணுவ ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராட உறுதியுடன் அணிதிரண்டுள்ளதாகவும் அச்செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.**

யாழ். குடாநாட்டின் மீது பாரிய தாக்குதல் ஒன்றை நடத்தும் நோக்குடன், ஆனையிறவு, பலாலி, காரைநகர் ஆகிய படைத்தளங்களில் பல்லாயிரக்கணக்கான படைகள் குவிக்கப்பட்டுள்ளனர். அண்மையில் சீனாவிலிருந்து சிறீலங்கா அரசால் தருவிக்கப்பட்ட T. 55 என்ற பாரிய யுத்த டாங்கிகளும், T. 85 என்ற பெரும் கவச வண்டிகளும் இச் சண்டையில் முதற் தடவையாகப் பயன்படுத்தப் படலாமென எதிர்பார்க்கப் படுகின்றது.

### கரையோரங்களில் கடுங்காவல்.

குடாநாட்டின் கரையோரப் பகுதிகளில் விடுதலைப்புலிகள் கடும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். ஆயுத தளபாடங்களையும் துருப்புக்களையும் ஏற்றிவரும் கப்பல்களும், விசைப் படகுகளும் கரையோரங்களில் துருப்புக்களைத் தரையிறக்க முனையலாம் என்ற எதிர்பார்ப் புடனேயே விடுதலைப் புலிகள் இப் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

யாழ்.குடாவின் கரையோரமெங்கும் விடுதலைப்புலிகள் கண்ணிவெடிகள் புதைத்துள்ளதாக இராணுவ அதிகாரி ஒருவர் தகவல் வெளியிட்டிருப்பதாக கொழும்புப் பத்திரிகைகள் ஏற்கெனவே செய்தி வெளியிட்டிருப்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

### எறிகணைத் தாக்குதல் ஆரம்பம்

குடாநாட்டுப் பகுதி மீது ஊரடங்கு உத்தரவை நடைமுறைப் படுத்தியிருக்கும் இராணுவம், பலாலி, ஆனையிறவு, காரைநகர் ஆகிய படைத்தளங்களிலிருந்து மக்கள் குடியிருப்புகளை நோக்கி எறிகணைத் தாக்குதல்களை நடாத்தியவண்ணம் உள்ளது. இதைத் தவிர, கடற்படை, பீரங்கிப்படகுகளில் இருந்து கரையோரப்பகுதிகளை நோக்கி பீரங்கித்தாக்குதல்கள் நடத்திவருகிறது.

### கேரதீவில் இராணுவம் பின்வாங்கல்

கேரதீவுப் பகுதியில் தரையிறங்கும் நோக்குடன் வந்த படையினர் விடுதலைப்புலிகளின் கடும் தாக்குதல்களினால் இழப்புக்களுடன் பின்வாங்கிச் சென்றுள்ளனர். டிங்கிப் படகுகளில் வந்த படையினரே இவ்விதம் தாக்கி விரட்டப்பட்டனர். இராணுவத்தினர் வந்த படகுகள் சேதங்களுக்கு உள்ளாகியதாகவும் சில படையினர் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.



### திலகர் கருத்து

சிறீ லங்கா அரசின் இவ் ஆக்கிரமிப்பு நடவடிக்கை குறித்து கருத்துத் தெரிவித்த விடுதலைப்புலிகளின் பேச்சாளர் திரு. திலகர் அவர்கள், குடாநாட்டில் இந்திய இராணுவத்தினுடனான மோதலின்போது விடுதலைப்புலிகள் பெற்ற அனுபவமும் சிறீலங்கா இராணுவத்தின் இம் முயற்சியினைத் தோற்கடிக்க உதவும் எனத் தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், ஏராளமான பொதுமக்களைக் கொன்றொழிக்கும் சிறீ லங்கா அரசாங்கத்தின் நோக்கத்தை விடுதலைப்புலிகள் முறியடிப்பார்கள் எனவும், குடாநாட்டில் அரசு காணம்போகும் தோல்வியே அது தனது இராணுவத் திட்டத்தைக் கைவிட்டு பேச்சுவார்த்தை மூலமாக அரசியல் தீர்வுகாண முன்வருவதற்கான சூழ்நிலைனைத் தோற்றுவிக்குமெனவும் தெரிவித்தார்.

இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை மோதல் பெரியளவில் ஆரம்பித்ததற்கான தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

● பிந்திய செய்தி

## கொழும்பில் இந்திய இராணுவம் ? காலிமுகத் திடலிலும் காவலாம்.

இந்திய வியாபார நிறுவனங்களைப் பாதுகாத்தல், இந்தியத் தூதரகத்துக்கும், இந்தியத் தூதுவருக்கும் பாதுகாப்பளித்தல் போன்ற காரணங்களுக்காக இந்திய இராணுவத்தினர் கொழும்புக்கு வந்திறங்கியுள்ளதாகப் பிந்திக்கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பில் அமைந்துள்ள இந்தியத் தூதரகத்திலும், வியாபார நிறுவனங்கள் அமைந்துள்ள பகுதிகளிலும் இந்திய இராணுவத்தினர் காவற் கடமையில் ஈடுபட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

கொழும்பில் காலிமுகத்திடலிலும் இந்திய இராணுவத்தினர் காணப்பட்டதாக நேரில் கண்டவர்கள் கூறியதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

இதுதொடர்பான மேலதிக விபரங்கள் எதுவும் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரையில் கிடைக்கவில்லை




### லண்டன் கருத்தரங்கு

சர்வதேச தமிழர் சம்மேளனம் மேலும் சில தமிழ் அமைப்புக்களுடன் இணைந்து நடாத்திய 'நீதியான அமைதியை நோக்கி' எனும் கருத்தரங்கை குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்த திரு. பழ. நெடுமாறன் அவர்கள் கருத்தரங்கில் உரையாற்றுவதை படத்தில் காணலாம்.

கடந்த 15.02.92 அன்று நடைபெற்ற இக் கருத்தரங்கு குறித்த விரிவான செய்தி இரண்டாம் பக்கத்தில்.

## பஞ்சத்திலும் பட்டினியிலும் கிழக்கில் தமிழர்

கிழக்கு மாகாணத்தில் தமிழ்மக்கள் சிறீலங்கா அரசினால் ஓர வஞ்சனைக்குட் படுத்தப்பட்டுள்ளனர். இங்கு சிங்கள மக்களுக்குச் செய்து கொடுக்கும் வசதிகளில் ஒரு சிறு பகுதிகூட தமிழ்மக்களுக்குச் செய்து கொடுக்கப்படவில்லை என செய்திகள் கூறுகின்றன. புதுக்குடியிருப்பு-மேற்கு கொலனி, பட்டிமேடு, நாயன்மார்திடல், குஞ்சம்பத்திடல் ஆகிய கிராமத்து மக்கள் பரிதாபமான நிலையில் பஞ்சத்திலும் பட்டினியிலும் வாடிவருவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் மீளக்குடியமர்த்துதல் என்ற பெயரில் தம்பலகாமம் அகதிமுகாமிலிருந்து சிறீலங்கா படையினரால் அழைத்துவரப்பட்டு குடியமர்த்தப்பட்டனர். ஆனால் தங்குமிட வசதியோ எதுவுமில்லாத நிலையிலும் தற்காலிகமாவது தமது வீடுகளை அமைத்துக் கொள்வதற்கு எந்த வித நிதியுதவியும் செய்யாத நிலையிலும் இருந்து வருகின்றனர். இவர்கள் ஒருவேளை உணவுக்கே பெரும் கஷ்டப்படுகின்றனர். இதேவேளை கல்வி

தொடர்ச்சி 7ம் பக்கம் ....

# புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



# நாம் இனவாதிகள் அல்ல

தற்போது யாழ் குடாநாட்டையும், வடபகுதியையும் தீவிர யுத்த மேகம் சூழ்ந்து கொண்டிருக்கிறது. தினம் தினம் சிறீலங்காவின் படையணிகள் பெருமளவில் குவிக்கப்பட்டு வருகின்றது.

மக்களும், இயக்கமும் பெரிய அளவில் தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். ஆனாலும் பொதுமக்கள் மத்தியில் இராணுவத் தாக்குதலைப் பற்றிய அச்சம் நிலவத்தான் செய்கின்றது.

யாழ் குடாநாட்டின் மீது இராணுவத் தாக்குதலுக்கு எதிராக ஒவ்வொரு குடிமகனும் தற்காப்பு யுத்தத்தின் பணியில் தாமாகவே ஈடுபட வேண்டிய நிலையில் உள்ளனர்.

அதே வேளை தெற்கில் தொண்டமான், பாராளுமன்றத் தெரிவுக்குழு, போன்றவர்களின் சமாதான முன்னெடுப்புக்கள் எவ்வித முன்னேற்றத்தையும் காணாமலே ஓய்வுக்கு வந்து விட்டன.

இவர்களின் பத்திரிகை அறிக்கைகளிலும், வீரவசன பேச்சுக்களிலும், சமாதானத்தையும் அமைதியையும் எதிர்பார்த்த தமிழ் மக்கள் மீண்டும் ஏமாற்றத்தையே அடைந்தனர்.

இலங்கைத் தீவில் இனப் பிரச்சியை சமரச முயற்சிகளினால் தீர்த்து வைப்பதற்கு ஒரு போதும் சிங்கள இனவாதிகள் இடமளிக்கப் போவதில்லை என்பதை மீண்டும் ஒரு முறை தமிழ் மக்கள் கசப்புடன் புரிந்து கொண்டனர்.

சிறீலங்கா இராணுவ வட்டாரங்களும், சிங்களப் பேரினவாதச் சக்திகளும் தமது செல்வாக்கை சிறீலங்கா அரசியலில் மிகவும் கேவலமான முறையில் பாவிக்கத் தொடங்கியுள்ளனர்.

ஒரு வேளை சர்வதேச நாடுகளின் மத்தியஸ்தத்துடன் இரு தேசிய இனங்களுக்குமிடையேயான பிரச்சினை சமரசமாக பேசித்தீர்க்கப்படும் நிலை தோன்றுமானால், பழைய காலங்களில் நடந்தது போலவே தமிழர்களுக்கு எதிரான இனக்கலவரம் தூண்டி விடப்படலாம்.

சமீபத்திய தெற்குப் பகுதி அரசியலில், தமிழர்களுக்கு எதிராக இனக்கலவரத்தை தூண்டும் முயற்சியே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. சிங்கள, பௌத்த, பேரினவாத சக்திகளின் அடக்குமுறைகளுக்கும், ஒடுக்கு முறைகளுக்கும் எதிராக தமிழ் தேசிய இனம் எழுந்து நின்று போராடுகின்றது.

இனரீதியாக எழுந்த அடக்கு முறையால் தான் எமது தேசிய உணர்வு வெடித்துக் கிளம்பியது. நாம் தமிழர், நாம் ஓர் தேசிய இனம், எம்முடைய தலைவிதியை நாமே நிர்ணயித்துக் கொள்ளும் உரிமை எமக்குண்டு என்ற அடிப்படை உரிமையை வலியுறுத்தித்தான் நாம் போராடி வருகின்றோம்.

போராட்டத்தை முன்னெடுக்கையில் இயல்பாகவே எழும் வினாக்களுக்கு விடை காணவே நாம் எம்மைத் தேடுகின்றோம்; எமது கலாச்சாரத்தை, எமது கலையை, பண்பாட்டை, எமது பிறப்பையும் தேடுகின்றோம்.

எமது தேடல் முயற்ச்சிகளைப் பார்த்து சிலர் எமக்கு "இனவாதிகள்" என்று முத்திரை குத்தப் பார்ப்பது மிகவும் அரைவேக்காட்டுத்தனமானது.

விடுதலை இயக்கம் நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து கொண்டு வருகின்றது. பலத்திலும், அறிவிலும், அநுபவத்திலும், நாளுக்கு நாள் முதிர்ச்சியடைந்து வருகின்றது.

தமிழ் மக்களும், இயக்கமும் இனவெறி பிடித்தவர்கள் அல்ல, சிங்களப் பேரினவாதத்துக்கு எதிராக போராடும் போது இயல்பாகவே எழும் தமிழ்த்தேசிய உணர்வையும், தேசிய எழுச்சியையும் இன்னொரு இனவாதமாகக் காட்டி எமது விடுதலைப் போராட்டத்தை கொச்சைப் படுத்த சில சக்திகள் முயற்சிகளை மேற்கொள்கின்றனர்.

நாம் இனவாதிகள் அல்ல, எமது மொழியையும் இனப் பண்புகளையும், நாம் பேண நினைப்பதை இனவாதமாகப் பார்ப்பது மிகவும் தவறனாது.

எமது தாயகத்தை அபகரித்து எமது தாயகத்தில் இருந்தே எம்மை அப்புறப்படுத்த சிறீலங்கா அரசு தமிழ்க் கிராமங்களில் சிங்கள ஆயுதந் தாங்கிய ஊர்காவல் படைகளை குடியேற்றி வருகின்றனர்.

தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்க சிறீலங்கா ஆயுதப்படைகளும், சிங்கள ஊர்காவற்படையினரும் முயலுகையில் இயல்பாகவே இவர்களுக்கு எதிராக தமிழ் மக்களும், இயக்கமும் போராட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது.

இந்நிலையில் இது ஒரு அடக்கு முறைக்கு எதிரான யுத்தமே ஒழிய வேறொன்றுமில்லை.

சிங்கள பேரினவாதத்துக்கு எதிராக போராடும் தமிழ் இனத்தையும் இன வாதிகளாகக் காட்ட முயல்வது முற்றிலும் ஏற்றுக் கொள்ளமுடியாத விடயமாகும்.

**எனக்குத் தெரியும் போராளிப் புலிகள் நண்பனின் உயிரைக் காப்பாற்ற முடியாதபோது அவனுடைய ஆயுதத்தையும் இலட்சியத்தையும் காப்பாற்றுவார்கள் என்பது.**

**● கவிஞர் இரும்பொறை ●**

# 'இணைவு அமைப்பு' குறித்த பேச்சில் ஈடுபட அழைப்பு

**● லண்டன் கருத்தரங்கில் முடிவு ●**

'நீதியான அமைதியை நோக்கி' என்னும் தலைப்பில் சர்வ தேச தமிழர் ஒன்றியம், இலண்டன் பல்கலைக் கழகத்தின் ஆபிரிக்க - கீழைத் தேசஆய்வுப் பிரிவு மண்டபத்தில் ஒரு நாள் கருத்தரங்கொன்றை நடத்தியது. இக் கருத்தரங்கில் ஏராளமான அறிஞர்களும்,கல்விமான்களும் கலந்துகொண்டனர். அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த முடிவுகள் இக் கருத்தரங்கில் விளக்கப்பட்டன.

தமிழீழத்தவர் தொடர்ச்சியான வரலாறு, குறித்த எல்லை, மொழி, பொருளாதார வாழ்வில் ஒன்றிப்பு, சேர்ந்து வாழும் உளவியல் விருப்பு என்பவைகளின் அடிப்படையில் 'மக்கள்' அல்லது நாட்டினத்தவர் ஆவர். எனவே இலங்கையின் பிரச்சினை சிறுபான்மை இன - பெரும்பான்மை இனத்தின் பிரச்சினையல்ல. இது தமிழீழத் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டம்.

தமிழீழமானது ஆதிபத்திய உரிமையுள்ளது. அதன் இறைமையானது, 1972 வரை தொடர்ந்து வந்து 1972ல் அரசற்ற தேசிய இனமாக்கப்பட்டுள்ளது. தமிழீழ இறைமையை பின்னோக்கிப் பார்ப்பின் இதனை தெளிவாகக் கண்டுணரலாம்.

எனவே அரசற்ற தேசிய இனமாக 1972 ல் மாற்றப்பட்ட தமிழீழத்தினர் தமது மண் மீட்புப் போராட்டமாக மேற்கொண்ட ஆயுதப் போராட்டம் சட்ட பூர்வமானது.

ஆகவே இவ் ஆயுதப் போராட்டத்தினை வழி நடத்தும் தமிழீழ விடுதலை புலிகளே, இம் முரண்பாடு சம்பந்தமாக பேச்சுக்கு அழைக்கப்படக்கூடிய ஒரேயொரு சட்ட பூர்வமான அமைப்பாகும். சிறி லங்காவும் - புலிகளும் மட்டுமே சகலவிதமான தீர்வுகளுக்கும் சம்பந்தப் படவேண்டிய உறுப்புகளாக உள்ளனர்.

பேச்சு வார்த்தைக்கு யுத்த நிறுத்தம்,ஆயுத ஒப்படைப்பு என்பன முன் நிபந்தனைகளாக இருக்கத் தேவையில்லை. தீர்வுக்கான பேச்சுவார்த்தை ஆரம்பமாகி தீர்வு நிலைகள் அண்மிக்கப் படும் பொழுது யுத்த நிறுத்த நிலை அறவிக்கப்படுவதே நல்லது. அதுவே நிரந்தரமாகவும் அமையுஅமையும்.

இவ் இவ் அடிப்படைகளில் சிறி லங்காவும், தமிழீழ விடுதலைப் புலிகளும் இம் முரண்பாட்டில் தீர்வை விரும்பி, இரு தரப்பும் ஏற்று அழைக்கும் நடு நிலை மத்தியஸ்தருடாக பேச்சுவார்தை நடத்துவதற்கான தமது விருப்பை வெளியிட வேண்டும். இப் பேச்சுவார்த்தைகளினூடக சர்வதேச உத்தரவாதமுள்ள ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதன் மூலம் சம்பந்தப் பட்ட இரு தரப்பினரான சிறி லங்கா அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும 'தமிழரும் - சிங்களவரும்' அமைதியாகவும் சுதந்திரமாகவும் வாழக்கூடிய 'இணைவு அமைப்பு' ஒன்றை உருவாக்க வேண்டும்.

மேற் கூறப்பட்ட விளக்கங்களும் தீர்மானங்களும் 160 க்கும் மேற்பட்ட தமிழ் அறிஞர்களும் கல்விமான்களும், சர்வ தேச சமூகத்தைச்சேர்த்த பேரறிஞர்களும் பங்கு பற்றிய 'நீதியான அமைதியை நோக்கி' கருத்தரங்கில் மேற்கொள்ளப்பட்டன.இக் கருத்தரங்கில் 18 ஆய்வுக் கட்டுரைகள் படிக்கப்பட்டன.

திரு.என்.சத்தியேந்திரா அவர்களின் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் டாக்டர்,என்.- சச்சிதானந்தன் தொடக்க வுரை நிகழ்த்தினார். திரு.சி.சிதம்பரப்பிள்ளை, திரு.டபிள்யூ.எஸ் ராஜகோபால், திரு.எம்.நேமிநாதன், திரு.பி.சாந்திகுமார், தி.எஸ்.ஜே.- பற்றிமாகரன், திரு.பி.சங்காரவேலு, திரு.அர்யுனா.சிற்றம்பலம், கலாநிதி.கோபாலபிள்ளை. மகாதேவா, டாக்டர்.எஸ். ஜெகராஜா, டாக்டர்.சண்முகதாசன, டாக்டர் .நகுலேஸ்வரன், திரு. எடிபூ ராடோ.மரீனோ, செல்வி.ஈ.பி.மான் ஆகியோர் உரையாற்றி கட்டுரைகள் படித்தனர். இக் கருத்தரங்கினை சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட தமிழீழ ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரான திரு. பழ.நெடுமாறன் அவர்கள் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்கள்.

# யாழ் குடாநாடு மீது படையெடுப்பு வேண்டாம்

**● கனேடிய தூதுக்குழு ●**

கனடிய தூதுக்குழுவின் அமைதிக்கான பரிந்துரைகள்

தை 20 முதல் 28 வரை இலங்கைக்கு விஜயம் செய்து தமிழீழ விடுதலைப்புலிகளையும், இலங்கை அரசாங்கத்தையும் சந்தித்த கனடிய தூதுக்குழுவினர் சில பரிந்துரைகளை இலங்கையில் அமைதி திரும்புவது சம்பந்தமாக பரிந்துரைத்துள்ளனர்.

1. சிறீலங்கா அரசாங்கமும், தமிழீழ விடுதலைப்புலிகளும் உடனடியாக யுத்த நிறுத்தம் ஒன்றை மேற்கொண்டு பேச்சு வார்த்தை மூலமான அரசியல் தீர்வொன்றைக் காணவேண்டும்.
2. இராணுவத்தீர்வு காண இலங்கை அரசு முயற்சிக்கக் கூடாது. எக்காரணம் கொண்டும் யாழ் குடாநாட்டின் மீது படையெடுப்பை நடத்தக் கூடாது.
3. அரசாங்கம் தனது நல்லெண்ணத்தை வெளிப்படுத்த வேண்டுமாயின் அரசியல் தீர்வுக்கான கால அட்டவணையுடன் கூடிய திட்டத்தையும் முன் வைக்க வேண்டும்.
4. சிறீலங்கா அரசாங்கம், பயங்கரவாதச் சட்டம், அவசரகாலச் சட்டம் ஆகிய அடக்குமுறைச் சட்ட விதிகளை கோரி சர்வதேச சட்ட விதிகளுக்கு அமைய நடக்க வேண்டும்.

இத் தூதுக்குழுவின் அதி.வண.- டாக்டர் லூயிஸ் வில்சன் (கடந்த வருட உலக திருச்சபைகளின் கூட்டுச் சங்கத்தின் தலைவர் Immediat past president of W. C. C) திரு. பியரி தூக்குத்தே (முன்னாள் குடியேற்றத்திற்கான ராஜாங்க அமைச்சர் திரு.ஜெரிவினரின் சட்ட ஆலோசகர்), மரியன் பொட்ஸ்போட் பிரேசர் (PEW International கனடிய நிலைய இயக்குனர்சபை உறுப்பினர்), பேர்லிகல் நீ.எம்.பி (லிபரல்யார்ட்டின் மனித உரிமைகள் பற்றிய விமர்சகர்), டாக்டர் கென்னத்குன் (லூத்தரன் திருச்சபையின், திருச்சபையும் சமுதாயமும் என்ற பிரிவின் இயக்குனர்) திரு.பீட்டர் மெக் கிறீத் எம்.பி (நிதியும் பங்கிடுதலுக்குமான அரச அமைச்சரின் காரியதரிசி), திரு.செவன்ட் றொபின்சன் எம்.பி (புதிய ஜனநாயகக் கட்சியின் வெளிவிவகார சர்வதேச மனித உரிமைகளுக்கான பேச்சாளர்) டாக்டர் ஸ்டீபன் ருப் மெக்கில் யூனிவர்சிட்டியின் சட்டத்துறையின் பட்டப்படிப்பு ஆராய்ச்சிப் படிப்புகளுக்கான இணை முதல்வர்) ஆகியோர் அங்கம் வகித்தனர்.

# பொருளாதார முற்றுகையால் யாழ் மக்கள் அவலம்

அரசாங்கம் மேற்கொண்டுள்ள பொருளாதாரத் தடையின் காரணமாக யாழ்ப்பாண மக்கள் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளதாகவும், அத்தியாவசியப் பொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகவும், போக்குவரத்து சீரழிந்துள்ளதாகவும்,பெருமளவில் மக்கள் தொழில்களை இழந்து அல்லல் படுவதாகவும், அண்மையில் வடபகுதிக்குச் சென்று திரும்பிய மெதடிஸ் திருச்சபை நல்லெண்ணக் குழுவினர் கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தனர்

அத்துடன் குழந்தைகளுக்கான பால் மா விநியோகம் சீராக நடைபெறாததால் போசாக்கின்மையும் சில சமயங்களில் பசி பட்டினியும் நிலவுகின்றது. மின்சாரம் இல்லாததால் வீடுகளிலும், மற்றும் வாடகை வாகனங்களுக்கும் மண்ணெண்ணை உபயோகிக்கப் படுகின்றது.

மீன்பிடித் தொழிலும், வேளாண்மையும் நடை பெற்றால் தான் கமக்காரரும் மீன் பிடித் தொழிலாளரும் வருமானம் பெற முடியும்.

யாழ்ப்பாணத்தில் நான்கு நாட்கள் பயணத்தை மேற்கொண்டு கொழும்பு திரும்பிய இக் குழுவின் தலைவரான வண. சோமாபெரேரா- திருச்சபைத் தலைவர்கள், ஆஸ்பத்திரி அதிகாரிகள் மற்றும் புலிகளின் தலைவர்களையும் சந்தித்துப் பேசியதாகத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உணவுப் பற்றாக்குறை, போக்குவரத்து எரிபொருள் இல்லாமை, வாழ்க்கைச் செலவினங்கள் அதிகரிப்பு, வேலையில்லாத் திண்டாட்டம், மருந்து வகைகள் தட்டுப்பாடு ஆகியன நிலவுவதாகத் தெரிவித்தார்.

www.tamilarangam.net



# குருநகர் பரீட்சார்த்த மீன் வளர்ப்புத் திட்டம் பெருவெற்றி!

## - பாலை மீன்களும் அங்கு பெருமளவில் விருத்தி -

குருநகர் பரீட்சார்த்த மீன் வளர்ப்புத் திட்டம் எதிர்பார்த்ததிலும் பார்க்கக்கூடிய பலனைக் கொடுக்கக்கூடிய வகையில் தென்படுவதாக அங்கு கடமையாற்றும் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

1991 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 25 ஆம் திகதி ஆய்வு நிறுவனத்தினரால் கிராஞ்சி கிராமத்தில் இருந்து கொண்டுவரப்பட்ட 'பாலை' மீன் குஞ்சுகள் இப் பண்ணையில் விடப்பட்டன அப்பொழுது அந்த மீன் குஞ்சுகளின் நீளம் 4 செ.மீ மாத்திரமே (70 நாட்களின் பின்) மேற்கொண்ட ஆய்வின்போது 17 செ.மீ வரை அவை வளர்ந்திருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இன்னும் 100 நாட்களில் அவைகளின் கால எல்லையை அடையும் பொழுது அவைகளின் வளர்ச்சி 50 செ. மீ க்குக் குறையாமல் இருக்கும் என்றும் ஒவ்வொன்றும் ஒரு கிலோவிற்குக் குறையாத நிறையுடையனவாய் இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் இப் பண்ணையில் வேறு சில இன மீன்களும் இயற்கையாகவே வளர்ந்து வருகின்றன. அவைகளும் சாதாரணமாகக் கடலில் வாழும் திலாப்பிய இன மீன்களிலும் பார்க்க நீளத்திலும், பருமனிலும் பெரியதாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# மனித உரிமைமீறலில் முன்னிடம் வகிக்கும் இலங்கைக்கு 82 1/2 கோடி டாலர் உதவி

## • பாரிஸ் மாநாட்டில் முடிவு !!

பாரிஸில் கூடிய இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மகாநாட்டில், மனிதஉரிமை மீறல்கள் கணக்கில் எடுக்கப்படாமல் இலங்கைக்கு 82 1/2 கோடி டாலர் உதவி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இலங்கை கேட்ட தொகையைவிட 3 கோடியே 50 இலட்சம் டொலர்கள் அதிகமாக வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. உலக வங்கியே இம்மகாநாட்டுக்கு ஏற்பாடு செய்திருந்தது.

### மேலும் 46 கோடி ஏப்பிரலில்

இதற்கிடையே சர்வதேச நாணய சபையிடமிருந்து மேலும் 46 கோடி டாலரை எதிர்வரும் ஏப்பிரல் மாதத்தில் இரண்டாவது தடவையாக கடனாகப்பெற இலங்கை திட்டமிட்டுள்ளது.

# கொக்கட்டிச்சோலை இனஅழிப்புக்கு இராணுவம் பொறுப்பு! ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை.

"கொக்கட்டிச்சோலையில் கண்ணிவெடி வெடித்ததில், இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டதினால், ஆத்திரமடைந்த இராணுவத்தினரே கொக்கட்டிச்சோலை படுகொலையைச் செய்துள்ளனர்." என கொக்கட்டிச்சோலை சம்பவம் குறித்து விசாரணை நடத்திய நீதியரசர்கள் கே.டி.எம். செனவிரத்தன சிவநாதன் செல்லையா, கலாநிதி ஏ.எம்.எம். சகால்தீன் ஆகியோரடங்கிய ஜனாதிபதி ஆணைக்குழு தமது இடைக்கால அறிக்கையில் கூறியுள்ளனர்.

# பரிதாபநிலையில் நாடு திரும்பியோர்

இந்தியாவிலிருந்து திரும்பி வந்த 2வது கட்ட அகதிகளில் 24 குடும்பங்களைச் சேர்ந்த 92 பேர் வவுனியா புகையிரத நிலையத்துக்கு எதிரே உள்ள தங்கும் விடுதியில் தற்காலிகமாகத் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தமது குழந்தைகளுக்கு பால்மா கரைக்கக் கூட சுடுநீர் வசதி இல்லாத நிலையில் தவிக்கின்றனர். அதே வேளை 3ம் கட்டமாக அகதிகள் 770 பேர் திருகோணமலைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இவர்களில் அரசாங்க ஊழியர்கள் கணிசமான தொகையினர் எனத் தெரிகிறது.

# ஜீப் வண்டி நாசம் மூவர் பலி

வவுனியா கொக்கிளியா காட்டை அண்மித்த பகுதியில் இராணுவ ஜீப் பொன்று விடுதலைப்புலிகளினால் தாக்கி அழிக்கப்பட்டது.

இதில் பயணம் செய்த உயர் இராணுவ அதிகாரி உட்பட மூவர் கொல்லப்பட்டதாகவும், மூவர் படுகாயமடைந்ததாகவும் தெரியவருகிறது. தாக்குதலைப் பற்றிய தகவல் அறிந்து ஸ்தலத்துக்கு கெலிகப்டர்களின் துணையுடன் விரைந்த மேலதிகப்படையினர் புலிகளுடன் கடுஞ்சமர் நடத்தினர்.

# 44 வகையான அதிமுக்கிய மருந்துகள் யாழ் வைத்தியசாலையில் அறவே இல்லை.

யாழ் போதனா வைத்தியசாலையில் முக்கியமான 44 மருந்து வகைகள் தற்பொழுது முற்றாகத் தீர்ந்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த 44 முக்கிய மருந்து வகைகள் அறவேயில்லாததினால் குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் அதிகளவில் யாழ் போதனா வைத்தியசாலையைத் தினமும் நாடிவரும் நூற்றுக்கணக்கான நோயாளர்களும், வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் அதிகளவானோரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைக்கு அவசியம் தேவைப்படும் 10 வகையான சிறு உபகரணங்களுக்கும் இங்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மேலும் பல மருந்துகளுக்கும் வைத்தியசாலையில் தற்போது பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இந்த மருந்துகளை அனுப்பி வைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த போதிலும் அவை இங்கு வந்து சேரவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

## தவறிற்கு வருந்துகிறோம்.

30.01.1992 களத்தில் பத்திரிகையில் வில்லி லில்லி கப்பலில் தனியாரின் மருந்துகள் எடுத்துவரப்பட்டன என தவறுதலாக அச்சுப்பதிக்கப்பட்டுள்ளது. தனியாரின் பொருட்களே எடுத்துவரப்பட்டன எவ்வித மருந்துகளும் எடுத்துவரப்படவில்லை.

# வெளிநாட்டுத் தமிழர்கள் வரலாற்றுக் கடமை செய்யச்சபதம்!

வெளிநாடுகளில் வாழும் தமிழீழத் தமிழர்கள் தமது தாயகத்தின் மீது பயங்கரப்போர் ஒன்றை சிங்கள அரசு நடத்த முற்படுவதைக் கண்டு, அவ்வாறான ஒரு யுத்தம் ஏற்பட்டால் அதிலிருந்து தமது உடன் பிறப்புக்களை மீட்டெடுத்து மண்ணையும் மீட்க உறுதிபூண்டு நிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குப் பூரண ஆதரவை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இதற்கிடையில் பாரிஸ் உதவி வழங்கும் நாடுகள் மகாநாட்டு உறுதி மொழியால் இலங்கை 82 1/2 கோடி டாலர்களையும், சர்வதேச நாணய சபையிடம் இருந்து கடனாக 46 கோடி டொலரையும் நிதி உதவியாக பெறவுள்ளது. இந்த 128 1/2 கோடி டொலரும் நிச்சயமாகத் தமிழ் இன ஒழிப்பு நடவடிக்கைகளிலும், தமிழீழ மண் மீதான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளிலுமே இலங்கை அரசால் செலவிடப்படும் என்பது கடந்த கால வரலாறு காட்டும் உண்மை.

ஆகவே, பண பலத்தால் தமிழீழ மக்களையும், மண்ணையும் அடிமைப்படுத்துவதை தடுக்க, வெளிநாட்டில் உள்ள தமிழர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு தாமாகவே மனமுவந்து பெருந்தொகையான பணத்தை அன்பளிப்புச் செய்ய விரும்புகின்றனர்.

இது குறித்து வெளிநாட்டில் வாழும் தமிழர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் "தமிழீழ மக்களின் அங்கங்களாகிய நாம் தன்னுயிர் பிரிவதை பார்த்ததில்லை என்னுயிர் பிரிவதை நானே பார்த்தேன்" எனப் பார்த்திருக்க முடியாது. ஆகவே நாம் எமது வரலாற்றுக் கடமையை நாமே செய்வோம். நாம் அகதி தான் ஆனாலும், எம்மாலான உதவியை எமது உடன் பிறப்புக்களின் உயிரைக் காக்கச் செய்வோம். அதற்காக எம்மால் இயன்ற பணத்தை மனமுவந்து எம் உடன்பிறப்புக்களைக் காக்கும் நிதியாக - அன்பளிப்பாகவே விடுதலைப் புலிகளுக்கு வழங்குகின்றோம்" என்றார்.

இது குறித்து மற்றொரு தமிழர் கருத்து தெரிவிக்கையில் "நாம் புனர்வாழ்வுப்பணிக்கென கொடுக்கும் பணம் புனர்வாழ்வுப் பணிக்கே செலவிடப்படுகிறது. ஒரு சதம் கூட வேறு நோக்கில் செலவிடப்படவில்லை. அவ்வாறே புலிகளுக்கென கொடுக்கும் பணம் அந்நோக்குக்கு செலவிடப்படுகிறது. எனவே எமக்கு எது விருப்பமோ, எமது மக்களின் புனர்வாழ்வும், எமது மக்களின் விடுதலையும் இரு கண்கள். ஆகவே, அவற்றுக்கு உதவுவதை எமது வரலாற்றுக் கடமையாகவே கருதுகிறோம்" என்றார்.

# கிழக்கிலும் இராணுவம் நடமாடமுடியாநிலை

மட்டக்களப்பில் பொலிஸ் காவலரண் ஒன்றின் மீது விடுதலைப்புலிகளின் அதிரடிப்படை தாக்கிய தாக்குதலுக்கு ஈடு கொடுக்கமுடியாத பொலிசார் இறந்தவர்களையும், காயமடைந்தவர்களையும் தூக்கிக் கொண்டு பின்வாங்கித் தப்பித்துக் கொண்டனர். இங்கிருந்த சில ரக ஆயுதங்களைப் புலிகள் கைப்பற்றினர்.

கிழக்கில் 5 படைத் தொகுதிகள் 5 விதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக இராணுவத்தலைமையகம் சர்வதேச செய்தி முகவர்களுக்குச் செய்தி கொடுத்து வரும் அதேவேளை தென் தமிழீழத்தில் அதிகரித்து வரும் விடுதலைப்புலிகளின் தாக்குதல் நடவடிக்கைகளால் கிழக்கில் இராணுவம் நடமாடமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக 'கிழக்கு தமது கட்டுப்பாட்டில்' எனும் பொய்ச்செய்தி உலகின்முன் அம்பலமாவதைக் கண்டு இராணுவத்தலைமைப்பீடம் கவலையும் அதிர்ச்சியும் அடைந்துள்ளது.

# உலக இளைஞர்கள் இலங்கையில் இறங்க மறுப்பு

"உலக இளைஞர்கள் கப்பல்" என்ற பெயரில் உலகைச் சுற்றிவரும் 13 நாடுகளைச் சேர்ந்த 272 இளைஞர்கள், கப்பல் கொழும்புத் துறைமுகத்தை அடைந்ததும், தரை இறங்க மறுத்து விட்டனர். தமக்கு இலங்கையைப் பற்றி நல்ல அபிப்பிராயம் இல்லாததினாலேயே தாம் கரை இறங்க விரும்பவில்லை என இளைஞர்கள் தெரிவித்துள்ளனர்.

# சிலுவையில் அறைந்தாவது தடுப்போம்

புத்தளத்தில் இரணவிலவில் 'வோய்ஸ் ஒவ் அமெரிக்கா'வின் அஞ்சல் நிலையம் ஒன்றும், பிரமாண்டமான உல்லாச விடுதியொன்றும் கட்டுப்படுவதை ஆட்சேபித்து அப்பகுதியிலுள்ள கத்தோலிக்க மக்கள் புதுவகையான எதிர்ப்பைக்காட்டி வருகின்றனர். தென்னைமரங்கள் மீது, வெள்ளை நிறச் சிலுவைகளை அறைந்து எதிர்ப்பை தெரிவிக்கும் மக்கள், தமது வேண்டுகோள் அரசால் கேட்கப்படாவிட்டால்.. தாம்மைத் தாமே சிலுவையில் அறைந்து - தமது எதிர்ப்பை காட்டத்திட்டமிட்டு உள்ளதாக இப்பகுதிமக்கள் உதவி அரசாங்க அதிபரிடம் எச்சரித்துள்ளனர். இராணுவத்துக்கோ, பொலிசாருக்கோ தாம் பயப்படப்போவதில்லை எனவும் உறுதி கூறியுள்ளனர்.

# மீளளிப்பு நிதி தொடர்பாக மேன்முறையீடு செய்யலாம்

தமிழீழத்தில் மீளளிப்பு நிதியினை ஏதாவது காரணத்தினால் செலுத்தமுடியாமல் இருப்பவர்கள் மேன்முறையீடு செய்யலாம். அவ்வாறு மேன்முறையீடு செய்கையில் அவர்களது முறையீட்டைக் கவனமாக ஆராய்ந்து அவர்கள் காட்டும் காரணங்களுக்குப் போதிய சான்றுகள் இருக்குமாயின் மீளளிப்பு நிதியிலிருந்து விலக்களிக்கப்படுகின்றனர். சிற்றுரைக்குழுக்களின் தகவல்களின் அடிப்படையிலேயே மீளளிப்பு நிதி செலுத்த வேண்டியவர்களின் விபரங்கள் சேகரிக்கப்படுகின்றன. இவ்விதம் மேன்முறையீடு செய்து மேன்முறையீடு நியாயமானது எனக்காணும் பட்சத்தில் முன்பு சம்பந்தப்பட்டவரிடம் இருந்து மீளளிப்பு நிதி பெறப்பட்டிருந்தால் உடனடியாகவே அந்நிதி மீளளிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதேவேளை தகுந்த காரணங்கள் இன்றி குறித்த காலத்துள் மீளளிப்புநிதி செலுத்தாதவர்கள் தண்டத்தொகையுடன் மீளளிப்பு நிதி செலுத்த வேண்டியவர்களாக உள்ளனர். மண்மீட்பு போரில் மக்கள் ஒவ்வொருவரும் தமது பங்கைச் செலுத்த வேண்டும் என்பதை உறுதி செய்யவும், இவ் விடுதலைப் போராட்டத்தால் ஏற்படும் நிர்வாகச் செலவுகளையும் அகதிகளுக்கான நிவாரணங்களையும் செய்வதற்கு உதவியாகவுமே இப் பணம் பெறப்படுகிறது. தமிழீழத் தாய்க்கு அவளது ஒவ்வொரு புதல்வனும் இக் கடமையை மனமுவந்து செய்ய வேண்டியவனாக உள்ளான்.

www.tamilarangam.net



# உற்பத்திப் போர்முனை

## - உழவு மாடுகளின் பயன்பாடு -

எமது தேச விடுதலைப் போராட்டம் அதி உயர் வடிவத்தைப் பெற்ற போது எம்மீது இடப்பட்ட பொருளாதாரத் தடை என்ற அழுத்தம் - எம்மைத் தனியான தேசம் ஒன்றிற்குரிய பொருளாதாரக் கட்டுமாணத்தை வரையறுக்க வேண்டிய தேவையை ஏற்படுத்தியது.

தமிழீழத்தின் வடபகுதிமீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடையின் கருத்துருவம், அப் பிரதேசத்தினுள் உணவுப் பொருட்கள் உட்பட மனித வாழ்வுக்கு அவசியமான பொருட்களை செல்ல விடாமல் தடுத்தலும் அதே நேரம், அங்கு எந்த விதமான உற்பத்தி நடவடிக்கைகளும் நடைபெறாமல் தடுத்தலுமாகும்.

இதன் காரணமாக, விவசாய உற்பத்தி நடவடிக்கைகளுக்குத் தேவையான விதை தானியவகைகளும், கிருமி நாசினிகளும், உரவகைகளும், எரிபொருளும் தமிழீழப் பகுதியினுள் வருவது தடுக்கப்பட்டது.

இவை ஒவ்வொன்றுக்கு - எதிராகவும் தனித்தனியான அணுகுமுறைகளை மேற்கொண்டு அதற்குரிய மாற்று நடவடிக்கைகளை எடுத்து உற்பத்தி நடவடிக்கையில் நாம் கணிசமானளவு வளர்ச்சியைக் கண்டோம்,

இக்கட்டுரையானது - எரிபொருள் சக்திக்கு மாற்றாக கால்நடை மாற்றாக உழைப்பு சக்தியை வளர்ப்பதற்கான ஒரு செயல் வடிவத்தை வெளிப்படுத்துகின்றது.

1990 ஆம் ஆண்டுக்குரிய காலபோக நெற் செய்கை உண்மையில் எமக்கு ஓர் பெரும் படிப்பினையைத் தந்தது.

அதாவது - அக்காலத்தில் ஏற்பட்ட எரிபொருள் தடையால் விவசாயிகள் உழவு இயந்திரத்தைப் பாவிக்க முடியவில்லை. மாறாக, அவ் வேளையில் கைவசமிருந்த குறைந்தளவு உழவு மாடுகளைக் கொண்டே அவர்கள் வயல்களை உழவு செய்தார்கள், இதனால், ஒரு மாத காலத்திற்குள் உழவு செய்து விதைப்பு முடியவேண்டிய நிலை மாறி உழவிற்கும், விதைப்பிற்கும் இரண்டு - இரண்டரை மாதங்கள் எடுத்தது.

இதன் விளைவுகள் பெரும் பாதிப்பைத் தந்தன. அதாவது காலம் பிந்திய விதைப்பால் பெரும்போகம், இடைப் போகத்துக்குரிய காலத்தையும் பிடித்துக் கொண்டது. அதுமட்டுமல்லாமல் பிந்திய விதைப்பால் குளத்து நீர், காலபோக நெற் செய்கைக்குப் பயன்படுத்தப் பட்டது. இதனால் ஏற்பட்ட நீர்த் தட்டுப் பாட்டினால் சிறு போக நெற் செய்கை, செய்கை பண்ணப்படும் பெருமளவு நிலப்பரப்புக்கள் செய்கை பண்ணப்படாமல் கைவிடப்பட்டன. அதே நேரம் காலம் பிந்திய விதைப்பால் வானம் பார்த்த வயல்கள் ( மழையை நம்பி செய்கை பண்ணப்படும் வயல்கள் பெரிதும் அழிந்தன. இதன் இன்னொரு பாதிப்பாக நோய்த் தாக்கத்தினால் உற்பத்தி பெரிதும் குறைந்தது.

இதே நேரம் நெற் செய்கை தவிர்ந்த ஏனைய விவசாய ( பயிர்ச் செய்கை) நடவடிக்கைகளும் இத்தகைய காரணிகளால் பெருமளவில் வீழ்ச்சியடைந்தன. இத்தகைய உற்பத்தி வீழ்ச்சியும் - அனுபவங்களும் விவசாய உற்பத்தி நடவடிக்கைகளில் உடனடியான கவனத்தை எடுத்து உற்பத்தியை அதிகரிக்கவேண்டிய நிலையை எமக்கு ஏற்படுத்தியது. இது தொடர்பாக இயக்கத்தின் துணை அமைப்புகளில் ஒன்றான ஆய்வு நிறுவனம் உடனடி நடவடிக்கைகளை எடுத்தது. வட

தமிழீழத்தின் முக்கிய உற்பத்தி நிலப் பரப்பானது, மணலாறு - வன்னிப் பிராந்தியத்திலேயே உள்ளது. இந் நிலப் பரப்புக்களே இப் பகுதிக்கான உணவுத் தேவையின் பெரும் பகுதியை நிவர்த்தி செய்கின்றன.

விவசாயத்தைப் பொறுத்தவரை எரிபொருளின்பெரும் பயன் பாடு நிலத்தைப் பண்படுத்துவதற்காகவே இருந்தது.

சில பத்து வருடங்களுக்கு முன்பு எங்கள் வயற் பரப்புகளில் இயந்திரங்களைப் பார்த்திருக்க முடியாது. விவசாயிகள் உழவு மாடுகளைப் பயன் படுத்தியே நிலத்தைப் பண் படுத்தி வந்தனர். இந்த நிலைமை சில விவசாயக் கிராமங்களில் தொடர்ந்து நடைமுறையில் இருந்தே வந்துள்ளன. நவீன விவசாய உற்பத்தி நடவடிக்கைகளுக்கு அமைவாகவும், வேலைச் சுலபத்திற்காகவும், சமூகத் தேவையின் நிமித்தம் விரைவான உற்பத்திக்காகவும் அண்மைகாலங்களில் இயந்திரங்கள் வயல்களில் இறங்கின.

இதில் குறிப்பிடக்கூடியது என்னவெனில் உற்பத்திச் செலவிற்கும், வருமான அதிகரிப்பிற்குமான விகிதத்தில் இந் நடவடிக்கை பெரிதான மாற்றத்தைக் கொண்டு வரவில்லை. விவசாயிகளின் வருமானம் அதிகரித்த அதே நேரம், உற்பத்திச் செலவும் மிக அதிகமானது.

சிறிலங்கா அரசால் மேற்கொள்ளப்பட்ட பொருளாதாரத்தடையின் விளைவாக எரிபொருளைப் பெற முடியாத நிலையில் உழவு இயந்திரங்களின் பாவனை நின்றது. இது எம்மைப் பொறுத்தவரைக்கும் நல்ல விளைவையே தந்தது.

இது தொடர்பாக வன்னிப் பிராந்திய ஆய்வு நிறுவனப் பொறுப்பாளர் ரகு (எம்.ஜி.ஆர்) அவர்கள் குறிப்பிடுகையில்:

• உழவு இயந்திரத்தின் தேவையை எமது சொந்த வளத்தால் மாற்றீடு செய்ய நாம் உத்தேசித்தோம். அதற்கு, வன்னிப் பிராந்தியங்களின் இன்னொரு பெரும்வளமான காளை மாடுகளைப் பயன்படுத்த எண்ணினோம்." என்றார்.

வன்னிப் பிராந்தியத்தில் உள்ள மொத்தப் பயிர்ச்செய்கை நிலத்தின் விஸ்தீரணம் 1,97,780 ஏக்கர்களாகும். இவை மாவட்ட ரீதியாக, வவுனியா 77,870 ஏக்கரும், கிளிநொச்சி 62,650 ஏக்கரும், மணலாறு- முல்லைதத்தீவு 57,260 ஏக்கருமாகும் .

மொத்த நிலப்பரப்பாகிய 1,97,780 ஏக்கர் நிலத்தையும் ஒன்றரை மாதத்திற்குள் உழவு செய்ய வேண்ணடுமானால் 35,161 சோடி உழவு மாடுகள் தேவைப்படும். ஆனால், உழவு இயந்திரத்தைப் பெரும்பான்மையான விவசாயிகள் பாவித்து வந்தமையால் உழவு மாடுகள் மிக மிகக் குறைவாகவே விவசாயிகளிடம் இருக்கின்றன.

இன்றைய போர்க்கால சூழ்நிலையில் உழவு இயந்திரத்திற்குப் பதிலாக தேவைப்படும் உழவு மாடுகளை எவ்வளவு விரைவிலும், எவ்வளவு கூடுதலாகவும் அறிமுகப்படுத்த முடியுமோ அவ்வளவு கூடுதலாகவும், விரைவாகவும், அறிமுகப்படுத்தினால் மட்டுமே தமிழீழத்தில் - உணவுப் பற்றாக்குறை ஏற்படாமல் தடுக்க முடியுமென்ற முடிவுடன் காளை மாடுகளை உழவுக்குப் பழக்கும் திட்டம் ஆய்வு நிறுவனத்தினரால் தயாரிக்கப்பட்டது.

முதற்கட்டமாக 4000 ம் சோடி காளை மாடுகளை உழவுக்குப் பழக்குவதென திட்டம் தயாரிக்கப் பட்டது. இதென்படி கொள்வனவு செய்யப்படும் காளைமாடுகள் உழவுக்குப் பழக்கிய பின்பு அவை விவசாயிகளுக்கு விற்கப்படும்.- இங்கு பெறப்படும் பணம் சுழற்சி முறையில் இத்திட்டத்திற்குப் பயன்படுத்தப்படும்.

இதன்படி 1991ம் ஆண்டு ஆடி, ஆவணி மாதங்களில் 200 சோடி காளை மாடுகளை உழவுக்குப் பழக்கும் திட்டம் ஆரம்பிக்கப் பட்டு நல்ல முறையில் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

* எரிபொருள் தடை நடைமுறையில்லாத வேளையில் நல்லினகாளை ஒரு சோடியும், நாட்டின காளை ஒரு சோடியும் என்ன விலையிலிருந்ததென்றும் காலப்போக்கில் அதன் கேள்வி விலை எவ்வாறு அதிகரித்துச் சென்றுள்ளது என்பதையும் கீழே உள்ள அட்டவணை விளக்குகின்றது.

| இனம் | எரிபொருள்தடைக்கு முன் 1சோடிகாளை மாட்டின்விலை | எரிபொருள்தடைக்கு பின் 1990ம்ஆண்டு காலபோகவிலை | 1991காலபோக விலை |
|---|---|---|---|
| நாட்டினம் | 2500/5000 ரூபா | 5000/12,000 ரூபா | 10,000/20,000 ரூபா |
| நல்லினம். | 5000/10,000 " | 15,000/25,000 " | 25,000/60,000 " |



## மக்களோடு புலிகள்

### நல்விளைவுகள்

1. இத்திட்டத்தின் பயனாக , உழவு இயந்திரம், உதிரிப் பாகங்கள், எரிபொருள் ஆகியவற்றின் கொள்வனவுக்காகச் செலவிடப்படும் பணம் எமது பிரதேசத்திற்கு வெளியில் செல்வது தவிர்க்கப்படுகின்றது. பணத்தின் சுழற்சி தமிழீழத்திலேயே நிலவுகின்றது.

2. கூலி விவசாயிகள் அதிகமாகத் தொழில் வாய்ப்பைப் பெறுகிறார்கள். இதன் மூலம் அவர்களின் குடும்ப வாழ்க்கை நிலை மேம்படுகின்றது.

3. இதுவரை காலமும் வெறும் இறைச்சிக்காக பயன்படுத்தப்பட்டு வந்த எமது தேசிய வளங்களில் ஒன்றான காளை மாடுகளின் பெறுமானம் உயர்ந்துள்ளது. இந்த விலை அதிகரிப்பின் பயனை விவசாயிகளான கால்நடை உரிமையாளர்களே பெறுவர்.

4 உழவு மாடுகளுக்குத் திடீரென ஏற்பட்ட வரவேற்பை அவதானித்த தனிப்பட்ட விவசாயிகள் நிலைமையை உணர்ந்துகொண்டு தாமாகவே காளைமாடுகளை உழவுக்குப் பழக்குவதற்கு தொடங்கினார்கள். இதன் மூலம் தேசத்தின் தேவையை உணர்ந்து - தன்னம்பிக்கையுடன் எமது விவசாயிகள் உற்பத்தியில் ஈடுபடத் தொடங்கி உள்ளார்கள் என்பது தெளிவாகிறது.

1991ம் ஆண்டு புரட்டாதி-ஐப்பசி மாதங்களிலேயே வன்னிப் பகுதியில் உள்ள வயல்கள் யாவும் உழவு மாடுகளின் மூலமே உழப்பட்டமை அவதானிக்க முடிந்தது. மிக விரைவில் இந் நிலப்பகுதிகளுக்குத் தேவையான உழவு மாடுகளின் தேவை நிவர்த்தியாகி விடுமென நாம் நினைக்கின்றோம்.

தமிழீழ ஆய்வு நிறுவனத்தினரின் கடுமையான உழைப்பும், எமது மக்களினது உற்சாகமான பங்களிப்பும், முயற்சியும் இத்துறையில் உழவு மாடுகளின் கணிசமான அளவு தேவையை நிவிர்த்தி செய்ய முடியுமென்ற நம்பிக்கையை எமக்குத் தருகின்றது.

## எங்கள் அம்பாறை இன்று திகாமடுல்ல ஆகிறது

ஒரு தேசிய இனத்திற்குரிய அடிப்படைப் பண்புகளின் ஒன்று அத் தேசிய இனத்திற்கு ஒரு பாரம்பரிய வாழ்நிலம் இருத்தலாகும். தமிழ் இனத்தின் பாரம்பரிய வாழ்நிலமாக இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்குப் பகுதிகளை உள்ளடிக்கிய தமிழ்ழம் அமைந்துள்ளது. எந்த ஒரு தேசிய இனத்தையும் அழிக்க முயலும் அரசுகள், அவ்வினத்தின் பாரம்பரிய நிலங்களை சூறையாடுவதும் அவ் இனத்தின் தனித்துவத்தை வெளிப்படுத்தும் பண்பாட்டுச் சின்னங்களை, நடைமுறைகளை அழித்தொழிப்பதும் இயல்பான ஒன்றே. இதனடிப்படையில் 1940-ம் ஆண்டில் இருந்து தமிழினத்தை அழிப்பதற்காக திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் தொடக்கப்பட்டன. இவ்வாறான சிங்களக் குடியேற்றத்தின் விளைவே அம்பாறை மாவட்டத்தின் உருவாக்கமாகும். மட்டக்களப்புடன் இணைந்திருந்த பகுதிகளைச் சூறையாடும் நோக்குடன் சிங்கள அரசு மட்டக்களப்பில் பெரும்பகுதியைப் பிரித்தெடுத்து, சிங்களப் பகுதிகளுடன் இணைத்து, விகிதாசார அடிப்படையில் தமிழ் இனத்தின் அளவைக் குறைத்து, அம்பாறை மாவட்டத்தை உருவாக்கியது. இதன் மூலம் இப்பகுதிகள் சூறையாடப்பட்டன. 1948-ம் ஆண்டு தொடக்கப்பட்ட கல்லோயா அபிவிருத்தித்திட்டம் என்ற போர்வையிலேயே இங்கு சிங்களக் குடியேற்றம் தொடக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து பட்டப்பண அலை என்ற பாரம்பரிய தமிழ்ப் பகுதிக்கு அம்பாறை எனப்பெயர் சூட்டப்பட்டது இத்திட்டத்தின் கீழ் 44 குடியேற்றக் கிராமங்கள் அம்பாறையில் உருவாக்கப்பட்டன. இவற்றுள் 38 சிங்களக் குடியேற்றங்களும் மிகுதி 6 மட்டும் தமிழ், முஸ்லீம் குடியேற்றங்களும் ஆகும். அம்பாறை என்ற பெயர் 1980-ம் ஆண்டு திகாமடுல்ல ஆயிற்று.

* 1960-ம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தின் பிரதிநிதியாகச் சிங்களவர் ஒருவர் பாராளுமன்றம் சென்றார்.
* 1963-ம் ஆண்டு தமிழர்கள் அப்பிரதேசத்தில் விகிதாசார அடிப்படையில் 3-ம் இடத்திற்கு தள்ளப்பட்டனர்.

| ஆண்டு | இனவிகிதம் (நூற்றுவீதத்தில்) | | |
|---|---|---|---|
| | தமிழ் | சிங்களம் | முஸ்லீம் |
| 1946 | 55% | 5.8% | 35% |
| 1953 | 50% | 11.5% | 38% |
| 1963 | 23.2% | 29.3% | 46% |
| 1981 | 20% | 38% | 41% |

www.tamilarangam.net






## மேஜர் கணேஸ்

மூதூர் பிராந்தியம் என்று குறிப்பிடும் போது கணேஸ் என்று குறிப்பிட்டுத்தான் - அவனது சாதனைகள்-அவனது இயல்புகள் பற்றிக் கூறிவிட்டுத்தான் அடுத்த விடயத்துக்குச் செல்வார்கள் திருமலை மக்கள். - அந்தளவிற்கு திருமலையின் வரலாற்றில் தனியிடம் பெற்றவன் கணேஸ்.

சைக்கிளில் -303 ரக துப்பாக்கியுடன் பொலிசார் வந்து கைது செய்து கொண்டு செல்லும் நிலைமையில் இருந்து, மூதூருக்குள் முகாமில் இருந்து புறப்பட்டால் 'உயிருக்கு உத்தரவாதம் இல்லை'யென சிறிலங்காவின் முப்படையினரும் கருதும் - கலங்கும் நிலையை உருவாக்கியவன் அவன். அதேபோல் " இது எங்கள் பிராந்தியம் - நாமே இங்கு செல்வாக்கு மிக்கவர்கள்- இங்கு மற்றவர்களுக்கு அனுமதியில்லை" என வேலி போட முனைந்தவர்களுக்கு தமிழீழத்தின் எந்தப் பகுதயிலும் எம்மால் தாக்குதல் நடத்த முடியும் - தாக்குதல் என்றால் இப்படித் தான் செய்வது - எமது மக்களுக்கு துன்பம் நேரும்போது எமது ஆயுதத்தின் வலிமையை இப்படித்தான் பயன்படுத்துவது" என்பனவற்றையெல்லாம் தனது செயற்பாடுகளால் விளக்கியவன் கணேஸ். ' தியாகம்- துணிச்சல் இவை இரண்டும் மட்டும் இருந்தால் போதும் அதுவே சாதனைகளுக்கு அத்திவாரமாகும்- எமது மக்களுக்கு கவசமாகும்.' என்று படிப்பித்தான்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தாக்குதற் பிரிவுத் தலைவனாக இருந்த சீலனின் நெருங்கிய நண்பன் இவன். அவன் மூலமாகவே போராட்டத்தில் இணைந்து கொண்டவன்.

திருமலை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெற்றுக் கொண்டிருந்த சிங்களக் குடியேற்றத்தை அதன் ஆபத்தை கூடுதலாக அனுபவித்த பிராந்தியம் மூதூராகும். சிறிலங்கா அமைச்சரவையிலே மிகவும் இனத்துவேசியான சிறில் மத்தியூவின் தலைமையில் "சேருவெல புனிதப் பிரதேசம்" என்ற பெயரில் சிங்களக் குடியேற்றங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. தானாக முளைத்த அரசமரங்களைச் சூழவுள்ள இடங்களையெல்லாம், மதத்தின் பெயரால் சிங்களக் குடியேற்றக் கிராமங்களாக்குவதே இவரது கடமையாக இருந்தது. இதற்கென அரசின் சகல வளங்களும் பயன்படுத்தப்பட்டன. கணேஸ் இப் பிராந்தியத்தினுள் காலடி எடுத்துவைக்கும் வரை தான் இந்தநிலை. அதன்பின் தாங்கள் பிறந்து வளர்ந்த இடம் தான் தங்கள் சொந்த இடம்-இயல்பான குடும்ப வாழ்வை மேற்கொள்ள விருமபுவோர் திருமலைக்கு குடியேற விரும்புவது சாத்தியமில்லை என்ற முடிவுக்கு சிங்கள மக்கள் வந்தனர். அந்தளவுக்கு சிங்களக் குடியேற்றங்கள் மீதான தாக்குதல்கள் அமைந்தன.

குறிப்பாக 1985 ஆம் ஆண்டு ஓர் நாள் நிகழ்ந்த சம்பவத்தைக் குறிப்பிடலாம். மேன் காமத்துக்கு அதனைச் சூழவுள்ள பகுதிகளுக்கும் சிங்கள ஊர்காவல் படையினர் வந்தனர். அகப்பட்டதையெல்லாம் கொள்ளையடித்தனர். அத்துடன், அக் கிராமத்தில் தப்பியோடியவர்கள் போக எஞ்சியிருந்த- பெண்களை தெகிவத்தை சவக்காலைக்கு கடத்திக் கொண்டு சென்றனர். இனவாதம், திருட்டுத்தனம் என்பன கண்ணை மறைத்த நிலையில் தாங்களும் பெண்கள் தானே - தமக்கும் இப்படியொரு நிலை வந்தால் எப்படியிருக்கும் என்பதையெல்லாம் சிந்திக்க நேரமில்லாத குடியேற்ற வாசிகளான சிங்களப் பெண்கள் அக்கிராமத்தில் இருந்த ஓடுகள், கதவுகள் என்பவற்றை கழற்றிக் கொண்டிருந்தனர். இச் செய்தி கணேஸிற்குத் தெரிந்தது. கணேஸ் சற்றும் தாமதிக்கவில்லை., ஏற்கனவே இந்த விசயத்தைக் கேள்வியுற்றுக் கலங்கிக் கொண்டிருந்த அமைப்புக்களிடம் ஆலோசனை நடத்தவில்லை அவன். நேரடியாக களத்திலிறங்கினான். இது தான் புலிகளுக்கும் ஏனையவர்களுக்கும் வித்தியாசம் என்பதை தமிழீழ வரலாறு அன்று தெட்டத்தெளிவாகக் காட்டியது.

கணேஸின் தோழர்களின் துப்பாக்கியிலிருந்து சினத்துடன் சென்ற ரவைகள் எமது பெண்களை விடுவித்தன. பலியானோர் போக எஞ்சிய ஊர்காவல்படையினர் தலைதெறிக்க ஓடினர். இச் சமயத்தில் பெண்களிடம் தனியாக அகப்பட்ட ஒரு ஊர்காவற்படை வீரன்,"எமது பெண்களின் சினம் எத்தகையது" என்பதை தெரிந்து கொண்டான். ஆனால் அதை மற்றவர்களிடம் எடுத்துச் சொல்வதற்கு அவன் உயிருடன் இருக்கவில்லை. அன்று ஒரு புதிய நிலைமை உருவாகியது. 'போராட்டத்தில் ஆண்கள் ஆயுதம் ஏந்தினால் மட்டும்போதாது பெண்களும் ஆயுதம் ஏந்த வேண்டும்' என்பதே அது.

இன்றும் மூதூரின் பகுகளிலும் தமது மண்ணை விட்டுப் பிரியாமல் 'எதனையும் தாங்கிக் கொண்டு போராட வேண்டும்' என்ற உணர்வுடன் மக்கள் இருக்கின்றார்கள் என்றால் அது இது போன்ற சம்பவங்களினால் தான். புலிகளும் மக்களும் ஒருவரே என்ற இந்த நிலையை உருவாக்கியவன் கணேஸ் என்றால் அது மிகையாகாது.

மூதூர்ப் பிராந்தியத்தின் பெயரால் கணேஸின் பெயர் உச்சரிக்கப்பட்டாலும், எல்லாப் பிராந்தியங்களின் மண்ணிலும் இவனது காலடி பதிந்துள்ளது. தமிழீழத்தின் சகல பிராந்தியங்களிலும் நடைபெற்ற தாக்குதலில் இவன் பங்குபற்றியிருக்கின்றான். வன்னிப் பிராந்தியத்தில் நடைபெற்ற உமையாள்புரம் தாக்குதல், திருநெல்வேலியில் நடைபெற்ற 13 இராணுவ வீரர்கள் மீதான தாக்குதல்கள், மன்னார் பிராந்தியத்தில் முதன் முதல் நடைபெற்ற 3 ஆம் பிட்டி கண்ணிவெடித் தாக்குதல், மட்டக்களப்பு பிராந்தியத்தில் நடைபெற்ற களுவாஞ்சிக் குடித் தாக்குதல், அம்பாறை மாவட்டம் திருக்கோயிலில் நடைபெற்ற இனத்துரோகி ஒருவன் மீதான தாக்குதல், மூதூருக்குப் போகும் வரை வடமராட்சியில் நடைபெற்ற பல தாக்குதல்கள் என பெரிய பட்டியலே உண்டு.

303 ரக் துப்பாக்கியால் விமானத்தைச் சுட்டு வீழ்த்த முடியும் என்ற செய்தியை உலகின் இராணுவ ஆய்வாளர்களுக்கு தெரியப்படுத்தியவனும் இவனே. இவ்வாறு 303 ரக துப்பாக்கியால் சுட்டு வீழ்த்தப்பட்ட உலங்கு வானூர்த்தியின் பாகங்களை கூனித் தீவிலிருந்து தமிழகத்துக்கு எடுத்துச் சென்று காண்பித்தார், அங்கிருந்து வந்த திரு.நெடுமாறன் அவர்கள்.

இதேபோல் ஒரு சமயம் மல்லிகைத் தீவுச் சந்தியில் இராணுவத்தினரின் வருகையை எதிர்பார்த்து கண்ணிவெடியைப் புதைத்து விட்டுக் காத்திருந்தான் கணேஸ். கணேஸ் புதைத்து வைத்த கண்ணி வெடிமீது அவர்களின் உலங்கு வானூர்த்தி தரையிறங்கியது. கணேஸ் விசையை அழுத்தினான். துரதிர்ஸ்டவசமாக அது வெடிக்கவில்லை. வெடித்திருந்தால் உலகில் விமானத்துக்கு கண்ணிவெடி வைத்தவர்கள் புலிகளே என்ற வரலாறு படைக்கப்பட்டிருக்கும். இத்தகைய வரலாற்று புகழ்வீரன் களத்தினிலே வீர மரணம் எய்திய செய்தி திருமலை -மூதூர் மக்களிடையே மட்டுமன்றி தமிழீழ மக்களின் நெஞ்சிலே துயரத் தீயைத் தோற்றுவித்த போதினிலும், அவ்வீரனின் கனவை நினைவாக்க பல இளைய வீரர்கள் அம் மண்ணில் இருந்து புறப்பட்டனர்.

## சூழல் மாசடைவதை தடுக்கும்நடவடிக்கையின் அவசியத்தை வலியுறுத்தி மக்களுடன் புலிகள்.




## யாழ்ப்பாணத்தில் சுகாதாரச் சீர்கேடுகள் அதிகரிப்பு.

**குறுகிய காலத்தினுள் யாழ்ப்பாணத்தைச் சுற்றிவர அகதி முகாம்களைத் தொடங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. சீமெந்து தட்டுப்பாட்டால் போதிய மலசலகூடங்கள் அமைக்க முடியவில்லை. மண்ணெண்ணை பீப்பாக்களையே மலங்கழிப்பதற்கு உதவக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டது. ஆனால் பருவக்காற்று காரணமாக இது கைவிடப்பட்டது.**

**கழிவுநீர் ஓடவசதியின்மைகளாலும், கழிவுகூடவசதியீனங்களாலும் தண்ணீர் அசுத்தமாக்கப்பட்டு டைபோயிட் காய்ச்சல், வயிற்றோட்டம், வயிற்றுவலி போன்ற நோய்கள் பரவலாகத் தொற்றுகின்றன. மருந்தின்மையின் விளைவாக அநேக மரணங்களும் ஏற்படுகின்றன. மலத்தியோன் இன்மையால் இலையான், நுளம்பு அதிகரித்து, மலேரியா காய்ச்சல் அதிகளவில் காணப்படுகின்றது.**

**இவ்வாறு தமிழர் நலன் காக்கும் ஒன்றியம் யாழ். குடாநாட்டின் சுகாதார நிலைபற்றி ஒரு அறிக்கை வெளியிட்டது.**

# கடந்தகால நிகழ்வுகளை மறவாதீர்

## மருத்துவபீடம் இடமாற்றப்படும் முயற்சி தொடர்பாக யாழ் மருத்துவபீட ஆசிரியர் சங்கம் தமிழ் மக்களுக்கு விடுத்த வேண்டுகோள்!

யாழ்ப்பாண மருத்துவ பீட ஆசிரியர் சங்கம்
ஆடியபாதம் வீதி, கொக்குவில்

அன்புடைத் தமிழ்மக்களே!

நீண்டகாலமாக இங்குள்ள பொதுமக்கள் மேற்கொண்ட முயற்சியால் உருவாகிய யாழ் மருத்துவபீடத்தை யாழ்ப்பாணத்திலிருந்து அகற்றும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதை நீங்கள் அறிவீர்கள். இடையூறில்லாத கல்வி மூலம் உங்கள் பிள்ளைகள் விரைவில் படித்து முடிக்க இது உதவும் என நீங்கள் நினைக்கக்கூடும். ஆனால் இதன் குறுகிய, நீண்டகால விளைவுகளைப் பற்றி சிந்திப்பது அவசியம். இதற்கு கடந்த கால நிகழ்வுகளை மீட்டுவதே போதுமானதாகும்.

இடம் பெயர்ந்து செல்லும் யாழ். மருத்துவபீடத்தில் கற்பிக்க மேலதிக பேராசிரியர்களோ, விரிவுரையாளர்களோ கிடைப்பார்கள் என எதிர்பார்க்க முடியாது. இந்திய அமைதிப்படை போர் நடத்திய காலத்தில் எமது கல்விக்கு ஏற்பட்ட இடையூறுகளைப் பார்த்துக் கொண்டு வாளாவிருந்தவர்கள் இன்று உதவி செய்வார்கள் என எதிர்பார்க்க முடியுமா? உண்மையில் யாழ். போதனா வைத்தியசாலையிலுள்ள நிபுணர்களிடமிருந்து கிடைக்கும் ஒத்துழைப்புத் துண்டிக்கப்படுவதால் நிலமை மோசமாகவே இருக்கும். எனவே இவ் இடமாற்ற முயற்சியினால் பயனடைபவர் யார்?

மேலும், அண்மைக்காலத்தில் அரசியல் காரணங்களுக்காக எல்லாப் பல்கலைக்கழகங்களும் மூடியிருந்த வேளை, அரசியல், பொருளாதார, இராணுவ நெருக்கடிகளின் மத்தியிலும் யாழ்பல்கலைக்கழகத்தின் சகல துறைகளும் கல்விப்பணியைத் தொடர்ந்ததை மறந்துவிடக் கூடாது.

கொழும்பு, பேராதனைப் பல்கலைக்கழகங்களில் கற்று வந்த உங்கள் பிள்ளைகள் 1983ம் ஆண்டு தாக்கப்பட்டு, ஆதரிப்பார் யாருமின்றி அனாதையாக யாழ்ப்பாணம் வந்ததையும், தங்களை யாழ். பல்கலைக்கழகத்திற்கு இடமாற்றம் செய்யும்படி உண்ணாவிரதம் இருந்ததையும், இங்குள்ள துறைகளில் அவர்கள் அனுமதிப்பட்டதையும், மற்றையோர் பயத்துடன் மீண்டும் தென்னிலங்கை சென்றதையும் மறக்கமுடியாது. அக்காலத்தில் யாழ். பல்கலைக்கழகம் சகலதுறைகளையும் கொண்ட பூரணமான பல்கலைக்கழகமாக வேண்டும் என்று எல்லோரும் பேசிக்கொண்டோம்.

இன்று மருத்துவபீடத்திலுள் வசதிக்குறைவுகள் யாவும் யாழ்பல்கலைக்கழகத்திலுள்ள சகல துறைகளுக்குமே (விவசாய பீடம், பொறியியற் பீடம் உட்பட ) பொதுவானவை. இதே காரணங்களைக் காட்டி மற்றைய துறைகளும் இடமாற்றம் செய்யப்படலாம். இவ்வாறு யாழ்ப்பாணத்தில் உயர்கல்வி வசதிகள் இல்லாத வேளை தென்னிலங்கையிலிருந்து உங்கள் பிள்ளைகள் கலைக்கப்படும் போது, எங்கே போவார்கள்?

வடபகுதி மக்களுக்கென உள்ள ஒரே ஒரு பூரணமான வைத்தியசாலையான யாழ்.போதனா வைத்தியசாலையை 1987ம் ஆண்டில் மூடிவிட அரசு முயற்சி எடுத்ததை மறந்திருக்க முடியாது. இம்முயற்சி தோல்வியடைந்ததற்கான காரணிகளில், யாழ். மருத்துவபீடமும் ஒன்று. மருத்துவபீடம் இங்கிருந்து அகற்றப்பட்டதும் 'போதனா வைத்தியசாலை' என்ற தகுதியை இழந்து சாதாரண வைத்தியசாலையாக மாற்றிய பின் அதை மூடிவிடுவது இலகுவானதாகிவிடும். இதன் பின் உங்கள் சுகாதார வசதிகளின் நிலை என்ன?

எமது மருத்துவபீடம் கொழும்பிற்கோ அல்லது பேராதனைக்கோ மாற்றப்பட முடியாது. ஏனெனில் அங்குள்ள போதனா வைத்தியசாலைகளில் ஏற்கனவே மாணவர் பயில்கிறார்கள். எனவே, வடபகுதியின் புனரமைப்பிற்கென ஒதுக்கப்பட்ட உங்கள் பெருந்தொகைப் பணத்தைப் பாவித்துத் தென்பகுதியில் ஒரு புதிய போதனா வைத்தியசாலையை நிறுவ வழிவகுப்பதாக இந்த மருத்துவபீட இடமாற்றம் அமையும்.

எனவே, உங்கள் பிள்ளைகளின் உயர்கல்வியும், சுகாதார வசதிகளையும் இல்லாமல் செய்வதற்கு இந்த மருத்துவபீட இடமாற்றம் அடித்தளம் அமைக்கும் என்பது வெளிப்படை. நீங்கள் விரும்பி உருவாக்கிய இந்நிறுவனம் இங்கிருக்க வேண்டுமா ? இல்லையா? என்பதை முடிவு செய்யும் பொறுப்பு, துணைவேந்தரையோ அல்லது ஆசிரியர்களான எங்களையோ மட்டும் சார்ந்ததல்ல. இதில் முக்கியமானவர் நீங்களே !

செயலாளர்
07.01.1991.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நரம்பியல் நிபுணர்களின்மையால் நோயாளிகள் அவதி.

யாழ் குடாநாட்டில் நரம்பியல் நிபுணர்கள் பெருந்தட்டுப்பாடாக இருப்பதினால் மூளைக்காய்ச்சல், பாரிசவாதம் போன்ற நோய்களால் பீடிக்கப்பட்ட நோயாளிகள் பலர் மிகுந்த வேதனையை அனுபவிப்பதாக யாழ் குடாநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சமீபத்தில் பாரிசவாதத்தால் கை கால் வழங்காத நிலையில் உள்ள இளைஞர் ஒருவரின் தந்தை ஒருவர் 'வெளிநாட்டில் இருக்கும் தமிழ் டாக்டர்கள், தமிழ் மக்கள் இக் கஸ்டமான வேளையில் நரம்பியல் நிபுணர்கள் பற்றாக்குறையை போக்கி, உதவ முயற்சி எடுக்கமாட்டார்களா? எமது மக்களை வாழவைக்க எமது சகோதரர்களான வெளிநாட்டுத் தமிழர்கள் உதவவேண்டும்' என நம்பிக்கையுடன் வேண்டுகோள் விடுத்தார்.

நரம்பியல் தமிழ் நிபுணர்கள் யாராவது தமது விடுமுறை காலத்தில் தமது சகோதரர்களுக்கு உதவ விரும்பினால், அல்லது வேறு தமிழர்கள், நரம்பியல் டாக்டர்கள் யாரையாவது துன்புறும் மக்கள் துயர் துடைக்க அனுப்பிவைக்க விரும்பினால், தமது நாடுகளில் உள்ள தமிழர் புனர்வாழ்வு நிலையத்தினருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# நிகழ்வும் நினைவும்

- திலீபன் -

கடந்த இதழில், இலங்கையின் இனப் பிரச்சினைக்குத் தீர்வாக இலங்கை - இந்திய ஒப்பந்தத்தினை அமுல்படுத்துமாறு இந்தியா சிறீலங்காவிடம் வலியுறுத்தி இருந்ததாக வெளிவந்திருந்த செய்திகள் தொடர்பாக நினைவுகளை நோக்கினோம் அல்லவா!

இவ் இதழில் கொக்கட்டிச்சோலை படுகொலை தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழு வெளியிட்டுள்ள இடைக்கால அறிக்கையினையொட்டித் தோன்றும் நினைவுகளை நோக்குவோம்.

## ஏன் இந்த இடைக்கால அறிக்கை?

கடந்த வருடம் யூன் மாதம் 12ம் திகதி கொக்கட்டிச்சோலையில் பல பொதுமக்கள் இராணுவத்தினரின் நரவேட்டைக்குப் பலியாகியிருந்தமை சர்வதேசமும் அறிந்த உண்மையாகும். ஆனால் இந்த உண்மையினை 'கண்டுபிடிக்க' சிறீலங்கா அரசுக்கு ஒரு ஜனாதிபதி ஆணைக்குழு தேவைப்பட்டது.

சிறீலங்கா அரசு பெரிய நெருக்கடிக்குள்ளாகும் வேளைகளிலும், சர்வதேச அழுத்தங்களுக்கு உட்படுத்தப்படும் வேளைகளிலும் ஆணைக்குழு அமைத்து 'உண்மைகளைக்' கண்டு பிடிப்பது சிறீலங்கா அரசின் வழமையான விளையாட்டுக்களில் ஒன்றுதான். இவ்வாறான ஆணைக்குழுக்கள் மூலம் ஒரு கண்துடைப்பு விசாரணையினை நடத்தி, சர்வதேச அழுத்தங்களிலிருந்து தற்காலிகமாகத் தன்னை விடுவித்துக் கொள்ளும் தந்திரோபாயத்தினை சிறீலங்கா அரசு பின்பற்றி வந்தது.

கொக்கட்டிச்சோலைப் படுகொலை நடந்த போதும் சிறீலங்கா அரசுக்கு எதிராகக் கடும் கண்டனம் எழுந்தது. இப்படுகொலை தொடர்பாக சர்வதேச செய்தி நிறுவனங்கள் செய்தி வெளியிட்டன. உலகமெங்கும் உள்ள தமிழ் மக்கள் இப்படுகொலையினைக் கண்டித்து போராட்டங்கள் நடாத்தினர்.

சிறிலங்கா அரசின் மனித உரிமை மீறல்கள் குறித்து பலத்த கண்டனங்கள் சர்வதேச அரங்கில் எழுத்து நின்றவேளை, கொக்கட்டிச்சோலை படுகொலையும் இடம்பெற்றமை சிறிலங்கா அரசின் மீதான சர்வதேச அழுத்தங்களை மேலும் அதிகரித்தது. இதனால், வழமைபோல' ஜனாதிபதி ஆணைக்குழு' ஒன்றினை அமைத்து விசாரணைக்கு உத்தரவிட்டது சிறிலங்கா அரசு.

இவ் ஆணைக்குழுவின் விசாரணையின் போது ஏராளமான தமிழ் மக்கள் ஆணைக்குழு முன் தோன்றி சாட்சியமளித்ததும், இப்படுகொலைச் சம்பவத்தில் குற்றம் சாட்டப்பட்ட 17 இராணுவத்தினரும் ஆணைக்குழு முன் தோன்றி சாட்சியமளிக்க மறுத்தமையும். பத்திரிகைகளில் செய்தியாக வெளிவந்திருந்தது.

ஆணைக்குழு முன் இராணுவம் சாட்சியமளிக்க மறுத்ததும் ஆணைக்குழுவின் விசாரணைகளின் முடிவு என்னவாக அமையும் என்ற 'ஆவலும்' எழுந்தது.

## தீர்ப்பின் பின்னணி

இந்நிலையில் "கொக்கட்டிச்சோலையில் நடந்த மக்கள் படுகொலைக்கு கொக்கட்டிச்சோலையில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினரே பொறுப்பு" என ஆணைக்குழு தீர்ப்பளித்துள்ளது.

மேலும், இப் படுகொலை எந்த ஒரு இராணுவ நடவடிக்கையின் விளைவு அல்லவென்றும், தமது சகாக்கள் இருவர் நிலக்கண்ணி வெடித் தாக்குதலில் கொல்லப்பட்டதனை அடுத்து எழுந்த ஆத்திரமூட்டல் காரணமாக சில இராணுவத்தினர் கட்டுப்பாட்டினை மீறிச் செயற்பட்டதன் விளைவு தான் என்றும் இவ் ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறீலங்கா இராணுவத்தினர் 'ஆத்திரமூட்டப்படுவது' எத்தனையோ தடவை நடைபெற்றும், எத்தனையோ தமிழ்ப்பொது மக்கள் கடந்த காலங்களில் கொல்லப்பட்டிருந்தும் சிறீலங்கா அரசு அதைப் பொருட்டாக மதித்தது கிடையாது.

ஆனால், ஏன் இந்தத் தீர்ப்பு? அதுவும் இடைக்கால அறிக்கையின் மூலமாக!

## என்ன நடந்தது சிறீலங்கா அரசுக்கு?

தமது இராணுவத்தின் படுகொலையினை ஒப்புக் கொள்ளும் அளவுக்கு 'மனப்பக்குவம்' வந்து விட்டதா?

அல்லது உண்மையான நீதி விசாரணை மேற்கொள்ளவும், அவ் விசாரணையில் அரசாங்கம் தலையிடாமல் இருக்கவும் தக்க வகையிலான மாற்றங்கள் ஏதும் நடைபெற்று விட்டனவா?

எதுவுமே இல்லை. மேற்குறிப்பிட்ட எதுவுமே நடைபெறவில்லை.

பெப்ரவரி மாதம் 7ம் திகதி பாரீஸில் இலங்கைக்கு நிதி உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் நடைபெற்றமையினையும் ஜனவரி மாதம் 30ம் திகதி இத்தீர்ப்பு அவசர அவசரமாக இடைக்கால அறிக்கையாக வெளியிடப் பட்டமையினையும் இணைத்து நோக்கினால் இத்தீர்ப்பின் நோக்கம் நன்கு புரிந்து விடும்.

> இவ் 'நிகழ்வும் நினைவும்' பகுதி தொடர்பான உங்கள் கருத்தினை எழுதுங்கள்.
>
> 'தமிழீழ விடுதலைப் போராட்டம்' தொடர்பாக உங்கள் மனதில் உள்ள கருத்துக்களை மனந்திறந்து எழுதுங்கள்.
>
> மாற்றுக்கருத்துக்கள் ஏதும் இருப்பின் விவாதிப்போம்... தெளிவு பெறுவோம்... விடுதலைக்காக உழைப்போம்...!

மனித உரிமை மீறல்களும், மனிதப் படுகொலைகளும் நடைபெறவில்லை எனக் கூறி- மூடி மறைத்து சர்வதேச ரீதியான உதவிகளைப் பெறமுடியாத அளவுக்கு சிறீலங்கா அரசு சர்வதேச அரங்கில் அம்பலமாகியுள்ளதால், சில மனித உரிமை மீறல்களை ஒப்புக்கொண்டு நீதி கோரும் தந்திரத்தை அரசு கையாள ஆரம்பித்துள்ளமையினையே இத் தீர்ப்பு வெளிப்படுத்துகின்றது.

இத்தீர்ப்பு சிறீலங்கா அரசுக்கு முண்டு கொடுக்க முயலும் ஓரிரு நாடுகளின் அன்பான 'அழுத்தத்தின்' விளைவாகக் கூட இருக்கலாம். எது என்னவாக இருந்தபோதும், முன்னரைப் போல் இப்போது 'முழுமையாக மூடிமறைத்தல்' சாத்திய மற்றது என்பது மட்டும் தெளிவாகிறது.

ஆனால் இவ் ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கை சில விடயங்களை மூடி மறைக்கத்தான் செய்கிறது.

* இராணுவத்தினரின் மத்தியிலுள்ள இனவாதத்தினை இவ் அறிக்கை வெளிப்படுத்தியதா?
* இப் படுகொலையின் பின்னால் உள்ள 'மக்களைப் பயங்கரத்திற்குள்ளாக்கும் நோக்கம்' இவ் அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டதா?

இக் கேள்விகளுக்கு விடை," இல்லை "என்பதே!. ஒரு ஆக்கிரமிப்பு இராணுவத்தின் கொடூர நடவடிக்கையினை வெறும் 'ஆத்திரமூட்டலாக' குறைத்து மதிப்பீடு செய்திருக்கும் இத்தீர்ப்பு, உண்மையில் சிறீலங்கா அரசின் கடந்த காலச் செயற்பாட்டில் இருந்து வேறுபட்டதாக அமையவில்லை.

இன்றைய சர்வதேச நிலைமைகளுக்கு ஏற்ப நாடகமாடி தனது நோக்கங்களை நிறைவேற்ற முயலும் சிறீலங்கா அரசினை அம்பலப்படுத்த 'உழைப்பது' எம் முன் உள்ள தேசியக் கடமையாகும். இதனை எத்தனை பேர் எம் மனதில் கொள்வோம்?

* * * * *

# மக்கள் தேவையைத் தீர்க்க நடமாடும் செயலம்

கிராம மட்டத்தில் உள்ள மக்களின் தேவைகள் எதிர்பார்ப்புக்கள், பிரச்சினைகள் ஆகியவற்றைக் கண்டறிந்து அதற்குரிய உடனடி நடவடிக்கை எடுத்து அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதே நடமாடும் செயலகத்தின் நோக்கம் என செயலக அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.

இக்குழுவில் யாழ் அரசாங்க அதிபரும் அவரின் செயலக அதிகாரிகள் யாழ்மாவட்டத்தில் உள்ள திணைக்களத் தலைவர்கள், அரச கூட்டுத் தாபனங்கள், சபைகள் ஆகியவற்றின் தலைவர்கள் ஆகியோருடன் சம்பந்தப்பட்ட பிரிவுக் கிராம சேவை அலுவலர்களும் இடம் பெறுகின்றனர்.

யாழ்.செயலகம் போன்றே அங்கு நிர்வாகம், நிதி, காணி திட்டமிடல், புனர்வாழ்வு புனரமைப்பு, சமூகசேவை, சிறு கைத்தொழில், புடவைக் கைத்தொழில், விளையாட்டுக் கிராமிய அபிவிருத்தி, இறப்பு பிறப்பு விவாகப்பதிவு, கல்வி, ஆட் பதிவு, சுகாதாரம், உள்ளூராட்சி, வீதி, வீடமைப்பு, கூட்டுறவு, கமநலச்சேவை, விவசாயம், கால்நடை, காடு பழவகை தென்னை வளர்ப்பு, நீர்ப்பாசனம், கடல்வளம், ஆகிய பிரிவுகள் செயற்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவற்றுக்கென நூற்றுக்கு மேற்பட்ட ஊழியர்கள் அங்கு கடமையிலீடுபடுத்தப்படவுள்ளனர்.

# பயன்தரு மரக்கன்றுகள் விநியோகம்

ஐம்பதினாயிரம் எலுமிச்சை மரக்கன்றுகளும் ஆயிரக்கணக்கான அகத்தி, பலா, நெல்லி ஆகிய மரக்கன்றுகளும் தமிழீழ ஆய்வு நிறுவனம் விநியோகம் செய்யவுள்ளது.

தேவைப்படுவோர் தமிழீழ ஆய்வு நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தமிழீழ ஆய்வு நிறுவனம் கேட்டுள்ளது.

# ஊட்டச்சத்துக் குறைவான கர்ப்பிணித் தாய்மார்

அகதிமுகாம்களில் வாழும் நூறு வீதமான கர்ப்பிணித் தாய்மாரும், பாலூட்டும் தாய்மாரும், அறுபது வீதமான சிசுக்களும், சிறுவர்களும் பூரண போசாக்கற்றவர்களாகக் காணப்படுகின்றனர் என்று அகதி முகாம்களில் நடாத்தப்பட்ட போசாக்குத் தொடர்பான ஆய்வு ஒன்றின் முடிவு கூறுகின்றது. பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ஆரம்ப சுகாதார நிலையங்களின் மூலம் நடாத்தப்பட்ட பூர்வாங்க ஆய்வு ஒன்றிலேயே மேற்படி முடிவு கூறப்பட்டிருக்கின்றது. யாழ் குடாநாட்டில் தற்போது கணிசமான இடம் பெயர்ந்த மக்கள் அகதிமுகாம்களில் தங்கி வாழ்கின்றனர். குடாநாட்டில் நிலவும் உணவு நெருக்கடி காரணமாக இம் மக்களுக்கு பூரண நிறை உணவு கிடைப்பது உறுதி செய்யப்படுவதில்லை. குறிப்பாக இம் முகாம்களில் தங்கியிருக்கும் ஐந்து வயதிற்கு உட்பட்ட குழந்தைகளும், கர்ப்பிணித் தாய்மாரும், பாலூட்டும் தாய்மாரும் உணவு நெருக்கடியால் மிகவும் பாதிக்கப்பட்டு பூரண போசாக்கற்றவர்களாக உள்ளனர்.

மேலும் இவர்களுக்குத் தேவையான ஊட்டச்சத்துள்ள மருந்துப் பொருள்களும் குடாநாட்டில் போதுமான அளவு கிடைப்பத்தில்லை.

# ஆடு வளர்ப்புத் திட்டத்திற்கு 20 ஆயிரம் ரூபா நிதி உதவி

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள இரண்டு கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு யாழ் கிராம அபிவிருத்தித் திணைக்களம் ஆடு வளர்ப்புத் திட்டத்துக்கு 20 ஆயிரம் ரூபாவை வழங்கவுள்ளது.

சிறுப்பிட்டி வடக்கு கிராம அபிவிருத்திச்சங்கம், கட்டப்பிராய் கலைமணி கிராம அபிவிருத்திச்சங்கம் ஆகியவற்றுக்கு தலா பத்தாயிரம் ரூபா வீதம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

# 60 விக்கிரகங்கள் இராணுவ நடவடிக்கையால் அகற்றப்பட்டன 700 கோவில்கள் சேதம்.

1983ம் ஆண்டுக்குப்பின் வடக்கு கிழக்கில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் 60க்கும் மேற்பட்ட இந்து விக்கிரகங்கள் அகற்றப்பட்டுள்ளன. 700க்கும் மேற்பட்ட கோவில்கள், விமானத் தாக்குதல்கள், இராணுவ நடவடிக்கைகளில் சேதமடைந்துள்ளன. இவற்றின் புனரமைப்புக்கான நிதி ஒதுக்கீடு எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மடு அகதிமுகாமில் பெரும் இட நெருக்கடி

வவுனியா மாவட்டத்தில் தொடரும் இராணுவ நடவடிக்கைகளை அடுத்து மடு அகதிகள் முகாமில் நெருக்கடி ஏற்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

வவுனியாவில் எல்லைப் பகுதித் தமிழ் மக்கள் வாழும் கிராமங்கள் மீது இராணுவத்தினர் மேற்கொள்ளும் எறிகணைத் தாக்குதல்களைத் தொடர்ந்து மக்கள் இடம் பெயர்ந்து மடு அகதிகள் முகாமிற்குச் சென்றுள்ளனர். ஏற்கனவே இங்கு, இருபத்தியெட்டாயிரத்திற்கும் அதிகமானோர் தங்கியுள்ளனர். மடு அகதிகள் முகாமில் குடிநீர்த் தட்டுப்பாடு, இட வசதியின்மை, மழை போன்றவற்றால் மக்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாகி இருப்பதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் கூறின. மேலும் முகாம் பகுதியில் வயிற்றோட்டம், மலேரியா, வாந்திபேதி, நெருப்புக் காய்ச்சல் போன்ற நோய்கள் பரவியிருப்பதாகவும், ஏற்ற மருந்துகள் இன்மையால் மக்கள் சிரமப்படுவதாகவும் தெரியவருகின்றது.

## தொற்று நோயால் 20 பேர் மரணம்

மடு அகதிகள் இருபதிற்கும் மேற்பட்டோர் தொற்று நோய்களால் மரணமடைந்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

பருவமழை பெய்து வருவதாலும், தகுந்த மருத்துவ வசதிகள் இன்மையாலும், சுகாதாரச் சீர்கேடுகளாலும் வயிற்றோட்டம், வாந்திபேதி, மலேரியா போன்ற தொற்று நோய்கள் இங்கு பரவியுள்ளன.

இம் முகாமில் இருபத்தெட்டாயிரத்திற்கும் அதிகமான மக்கள் தங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# உணவு,மருந்தின்றி வாடும் நெடுந்தீவு மக்கள்

நெடுந்தீவில் மக்கள் பட்டினியால் வாடுவதாகவும் போதிய மருத்துவ, உணவு வசதிகள் கிடைப்பதில்லை எனவும் அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.
மரக்கறிக்காக தும்பங்காய்,முசுட்டை, தூதுவளை போன்ற செடி இலைகளைச் சமைப்பதாகவும் தெரிவித்தனர்.
மக்கள் மத்தியில் பணப்புழக்கம் இல்லையெனவும், பிடிக்கப்படும் மீனை வாங்க முடியாதிருப்பதால் அவற்றைக் கருவாடாகப் போடவும் உப்புக் கிடைப்பதில்லையெனவும் இதனால் மீன்கள் வீசப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. க.பொ.த. பரீட்சை நேரம் கடற்படையினர் நயினாதீவில் இருந்து அரிசியை கொண்டு வந்ததாகவும் அதற்கு முன்னர் இருப்பில் இருந்த அரிசி, ஒருவருக்கு அரைக் கிலோ வீதம் பணத்துக்கு வழங்கப்பட்டதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

## நெடுந்தீவிலிருந்து 28 பேர் மீண்டனர்

இராணுவக் கட்டுப்பாடில் உள்ள நெடுந்தீவில் இருந்து 28 பேருடன் 'குமண' கப்பல் பருத்தித்துறை துறைமுகம் வந்தடைந்தது.
இதில் 6 பெண்களும் குழந்தைகளும், ஆண்களும் வந்தனர்.
சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரின் உதவியுடன் கொண்டுவரப்பட்ட இவர்கள் செஞ்சிலுவைச் சங்க வாகனங்கள் மூலமாக யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டனர்.

# "பிரச்சினையில் தொடர்புடையோர் புலிகளும் இலங்கை அரசுமே"

■ பிரித்தானியத் தூதுவர் ■

'வடக்கு கிழக்குப் பிரச்சனையில் சம்பந்தப்பட்டோர் தமிழீழ விடுதலைப்புலிகளும் இலங்கை அரசுமேயாகும். அவர்கள் இருவரும் நல்நோக்குடன் தீர்வுக்காக முயற்சிக்காவிடில் தீர்வு காண்பது இயலாத காரியமாகிவிடும்.' என இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் எட்வேர்ட் கோன் பீல்ட் அவர்கள் மல்வத்த பீட மகாநாயக்க தேரோ ரம்புக்வெல்லே சிறீ விப்பஸ்ஸியிடம் கூறினார். கண்டியில் வைத்து மரியாதைச் சந்திப்பாக பௌத்த தலைமைக் குருவைச் சந்தித்த பிரிட்டிஷ் தூதுவர் வடக்கு கிழக்கு பிரச்சனைக்கு விரைவில் தீர்வு காணப்பட வேண்டுமென்ற தமது ஆவலை தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே தமிழீழ விடுதலைப்புலிகளை தேசிய விடுதலை இனப்போராட்டத்தின் தீர்வுக்கான ஒரே பிரதிநிதிகளாக பிரிட்டிஷ் தூதுவர் கூறியுள்ளதானது சர்வதேச நியதிகளின்படி முரண்பாட்டில் சம்பந்தப்பட்டோரை தெளிவாக இனங்கண்டு பேச்சுக்களோ அரசியல் தீர்வுக்கான நடவடிக்கைகளோ சரியான பாதையில் நடைபெற வழிகாட்டுமென சர்வதேச அவதானிகள் கருத்துத்தெரிவித்தனர்.

# ஆய்வு நிறுவன தேசநிர்மாணிகளால் மதவனசிங்கம்குளம் புனரமைப்பு

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மதவனசிங்கம் குளம் புனரமைக்கப்பட்டுள்ளது. தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் தேச நிர்மாணிகள் பிரிவினரால்,'இப் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன 'என்று தமிழீழ ஆய்வு நிறுவனம் வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அக்குறிப்பில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:
இக்குளத்தின் வலதுகரைச் சுலுசில் இருந்த கொங்கிறீற் குழாய்கள் உடைந்ததால், அணைக்கட்டில் மண் கசிவு ஏற்பட்டு 1990 மாரி காலத்தின் பின் குளம் உடைந்தது. உடைப்பேற்பட்ட போது அப்பகுதி விவசாயிகளும், சிற்றூரவையினரும், உற்பத்திக் குழுவினர் ஆகியோரும் ஒன்றிணைந்து மண்மூட்டைகளை அடுக்கி, உடைப்பைத் தடுத்தனர்.
இக்குளமானது 4020 ஏக்கர் அடி நீர்த்தேக்கத்தையும், 400 ஏக்கர் பயிர்ச் செய்கை நிலப்பரப்பையும் உடையதாகும். மதவனசிங்கம் குளம் புனரமைக்கப் பட்டதனால் 300 குடும்பங்கள் நேரடியாகப் பயன் அடைந்தனர். மூன்று லட்சம் ரூபா பெறுமதியுள்ள வேலைகள் இங்கு மேற்கொள்ளப்பட்டதால், இப் பகுதியில் வேலையற்றிருந்த தொழிலாளர்கள் பலர் வேலை வாய்ப்பைப் பெற்றனர்.
உரிய நேரத்தில் இவ் வேலை செய்யப்படாதிருந்தால், இக்குளத்தின் கீழாகவுள்ள கணுக்கேணிக் குளம் உடைப்பெடுத்து அதனால் முள்ளியவளை மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்படும் நிலையும் தோன்றியிருக்கும். அத்துடன் ஆண்டு தோறும் இக்குளத்தின் கீழ்ப் பெறப்படும் 25,000 புசல் நெல் விளைச்சலையும், கணுக்கேணிக் குளத்தின்கீழ் பெறப்படும் 75,000 புசல் நெல் விளைச்சலையும் இழக்கும் நிலையை இக் குள புனரமைப்பு தவிர்த்துள்ளது. இப் புனரமைப்பு வேலைகள் நடைபெற்ற மணலாற்றில் தீவிரமான போர் நடைபெற்றுக் கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## மீனவர் மீது சூடு

மீனவர்கள் சென்ற வள்ளத்தை நோக்கி பூவரசந் தீவுப்பகுதிக்கு வந்த இராணுவததினர் சுட்டனர். இச்சம்பவம் 21-01-92 அதிகாலை குடாக் கடல் பகுதியில் நடைபெற்றது. வளளத்தில் சென்ற மீனவர்கள் கடலில் பாய்ந்ததினால் உயிர் தப்பியதாகக் கூறப்படுகின்றது.
பூநகரிப் பகுதியில் தனித் தீவாக அமைந்துள்ள மேற்படி தீவில் இராணுவத்தினர் தங்கக்கூடிய வசதிகள் இல்லையென்றும் வந்து செல்லும் சமயங்களில் மேற்படி தீவில் நின்று இராணுவத்தினர் மீன்பிடி தொழிலாளர்களை நோக்கி தாக்குதல் நடத்தி வருவதாகவும் தெரியவருகின்றது.

## ஆசிரியர் இன்றி 'இயங்கும்' பாடசாலை

புங்குடுதீவு மகா வித்தியாலயம் 90 மாணவர்களுடன் கடந்த 6ம் திகதியில் இருந்து இயங்கி வருகிறது. கல்வி கற்பதற்கு கொப்பி, புத்தகங்கள், பென்சில் பேனா இன்றி மாணவர்கள் செல்கின்றனர். மகா வித்தியாலயத்தில் கல்வி கற்பிக்க ஆசிரியர்களுமில்லை. அங்கு கல்வி கற்பிக்க ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் சிலரையும்இ வேறு சிலரையும் கடமையாற்றுமாறு இராணுவம் பணித்துள்ளது.

# யாழ். அரச அதிபருக்கு பல்வேறு பொது ஸ்தாபனங்கள் முறையீடு

## உடுத்துறை கிராம அபிவிருத்திச் சபை - செம்பியன்பற்று

உடுத்துறை கிராம வாசிகளாகிய நாம் பின்வரும் நான்கு விடயங்களை கஸ்டமான இன்றைய கால கட்டத்தில் செய்து உதவும்படி கேட்கிறோம்.
அ) சகலமக்களும் பெறும் வகையில் நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.
ஆ) மாதத்தில் 4 தடவை உலர் உணவை மக்கள் பெறவேண்டும்.
இ) 1500 ரூபாவுக்கு மேல் சம்பளம் பெறுவோருக்கும் நிவாரணங்கள் பெற உதவவேண்டும்.
ஈ) பருத்தித்துறை இறங்குத்துறையை புனரமைத்தல் வேண்டும்.

மேற்படி நான்கு விடயங்களும் செவ்வன நடைபெற தங்களை ஆவனசெய்யும்படி வேண்டுகிறோம்.

வேலாயுதப்பிள்ளை
செயலாளர்.

## நவாலி மகாவித்தியாலய - பாடசாலை அபிவிருத்திச்சங்கம்.

அராலியிலிருந்து இடம் பெயர்ந்து தற்போது நவாலி மகா வித்தியாலயத்தில் தங்கியிருப்போரை வசதியான வேறு இடத்துக்கு மாற்றும்படி கேட்டுக் கொள்கின்றோம். எமது பாடசாலையானது தொடர்ந்து 3 வருடங்களாக இடம் பெயர்ந்தோர் வாழும் முகாமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் இப்பகுதி மாணவர்களின் கல்வி முற்றாகப்பாதிப்படைந்து வருகிறது. பாடசாலைத் தளபாடங்களும் சுவர்களும் கூட கடுமையாகச் சேதமாகியுள்ளன. மேலும், சுகாதாரச்சீர் கேடுகளால் மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர். எனவே இக்கிராமத்தின் ஏழைச்சிறுவர்கள் கல்வியை ஒழுங்காகக் கற்கக் கூடியமுறையில் உதவி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சற்குணலிங்கம்
செயலாளர்.

## கிராம அபிவிருத்திச்சங்கம் - அம்பன்

கடந்த ஒரு வருடகாலமாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற மக்களாகிய நாம் இப்பகுதியில் அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத்தடையினால் பல கஸ்டங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது. எனவே இப்பகுதி மக்களுக்கு நிறுத்தப்பட்டுள்ள உணவு முத்திரை, ஜனசக்தி நிவாரணம் ஆகியவற்றைத் தொடர்ந்து வழங்கும்படியும், கப்பலிலிருந்து உணவுப் பொருட்களை இறக்க வசதியாக, பருத்தித்துறை துறைமுகத்தை புனருத்தாரணம் செய்யுமாறும், சம்பளம் வழங்கப்படாத அரசாங்க ஊழியருக்குச் சம்பளம் வழங்கும் படியும், இடம் பெயர்ந்துள்ள அனைவருக்கும் நிவாரணம் வழங்க வேண்டுமெனவும், அத்தியாவசிய உணவுப் பொருட்கள், மருந்து மின்சாரம் ஆகியவற்றை வடக்கு - கிழக்குக்கு கிடைக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமெனவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

சி. செல்லத்துரை
தலைவர்.

## பாரதி சனசமூக நிலையம் - உடுத்துறை

உடுத்துறை சமூகத்தினராகிய நாம் சுயதொழில்களை ஒழுங்காக செய்து வருமானம் பெறமுடியாத இன்றைய காலகட்டத்தில் பின்வரும் 3 விடயங்களும் நன்கு நடைபெற. உதவவேண்டுமென தங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.
1. வறுமையை போக்கும் வகையில் சகல மக்களுக்கும் நிவாரணம் வழங்கவேண்டும்.
2. வாராந்தம் உலர் உணவை மக்கள் பெறவேண்டும்.
3. பருத்தித்துறை இறங்குதுறையை புனரமைத்தல் வேண்டும்.

தனபாலசிங்கம்
செயலாளர்.

இவ்வாறான கடிதங்கள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கம் உடுத்துறை, ஐக்கிய விளையாட்டுக்கழகம் பருத்தித்துறை, கற்கோவளம் சனசமூக நிலையம் போன்றவற்றால் அரசாங்க அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

**பஞ்சத்திலும்....**

ர்வை எனும் இடத்தில் பெரும்பான்மை இனத்தவரான சிங்களவர் குடியமர்த்தப்பட்டு மீன்பிடித் தொழிலுக்கான உபகரணங்களும் வழங்கப்பட்டு, தங்குமிட வசதியும் உலர்உணவு வகைகளும் வழங்கப்பட்டுவருகின்றது என்றும் அச்செய்திகள் கொழும்பில் தெரிவித்துள்ளன.

ஒரு உயிர் உன்னதமான என்பதை நான் அறிவே ஆனால் உயிரிலும் உன்ன மானது எமது உரிமை, எம சுதந்திரம். ● வே. பிரபாகரன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## இன்னமும் அகதியாய்...?

ாயகம்
.னக்காய் நீண்டு
ிடக்கையில்
ஏன்
அகதியாய் உன்னை
ினைக்கிறாய்?

ுசந்தம்
ாசலில் காத்துக்கிடக்கையில்
.னக்கேன் முகத்தில்
வலைக் கோடுகள்?

ாளைய
ாழ்வுக்காய் நாங்கள்



நடக்கையில்
நேற்றைய நிகழ்வுகள்
நிரந்தரமல்லவே?

இன்னும் ஏன்
நேற்றினுள்
புதைந்துபோய்
நாளையை இழக்கிறாய்?

இன்னமும்
நாடிக்குக் கைகொடுத்து
சூனியத்தில்
விடியலைத் தேடுவதால்
பயனென்ன?

நாளை
உருவாகும் நமது
தேசத்தில்
அகதியென்றிடும் சொல்லை
இல்லாமற் செய்வோம்
ஆதலால்
உன்னுடைய
துயரங்களைத் துடைத்தெறிய
துணிவுடன்
எழுந்துவா.

உன்
முகத்தின்
கவலை வரிகளை
நாடியில் கிடக்கும் கைகளால்
அழுத்தித் துடைத்து விட்டு - உன்
வசந்தத்தை
நீயே தேடு

இனியும் நீ அகதியல்ல
ஏனெனில்
நாளைய வசந்தமே
நீ
படைக்கப்போவதுதான்
ஆம்...
நாளையவரலாறே நீதான்.

■ தமிழீழ மாணவர். ■

## எனது பசி

■ வவுனியா திலீபன் ■

அந்தப் பசி
மனதுக்குள்
நித்தமும் பொங்கும்!

அது தொடரும்!
இரவில், தனிமையில்
உறக்கத்திற்கு முன்னர்
ஓராயிரம்
கதைகள் சொல்லும்!

அதுதான்
என் கிராமத்தை
பார்க்க வேண்டும் என்கிற
பசி! ராட்சசப்பசி

ஒரே நாளில்
ஒரே நிமிஷத்தில்
நாங்கள்
நாடு கடத்தப்பட்டதை
உணரும் பொழுதில்
வேதனைகள் விஸ்வரூபம் எடுக்கும்!

என் அழகிய கிராமமே!
நீ இப்போது
எப்படி இருக்கிறாய்?

அந்நியனின்
ஆயுதங்களுக்கு
அஞ்சியா இருக்கின்றாய்?

நான் நடந்து திரியும்
அந்த மணல் பாதைகளில்
இனவெறியர்
இரவு பகலாய் அலைகிறார்களாம்
மெய்யா?

என் இதயத்துள்
இளமைப் பாடம்
நடாத்திய
அந்தப் பச்சை வயல்வெளிகளில்
நெருஞ்சியா பூத்திருக்கிறது?

எனக்குத் தெரியும்
மனிதன் விரட்டப்படும்போது
மிருகம் சிரிக்குமென்று
எனக்குத் தெரியும்

ஒரே நாளில்
ஓடிவந்தவர்களெல்லாம்



உட்கார்ந்திருக்கவில்லை

ஓசையெழுப்பத் தொடங்கியுள்ளனர்
உள்ளத்தில்
எழுச்சியின்
பாஷையைக் கற்றுக்கொள்கின்றனர்

என் பசி இதுதான்
மீண்டும்
என் கிராமத்தின்
மடியில்
நான் தலைவைத்து
உறங்க வேண்டும்!

திசையற்றுத் திரியும்
என் தோழர்களைத்
தொட்டுக்கொள்ள வேண்டும்!

## தாயகத்தின் சாவிக் கொத்துக்கள்

புறப்படு தோழா
இந்த
அவசரமும்
மிகுந்து விட்ட
நாட்களில் அல்லாமல்
எப்போ
தொழிற்படப் போகிறாய்?

குளத்துக் கட்டிலும்
சனசமூக நிலைய முற்றத்திலும்
வகுப்பறையிலும்
நீ
விமர்சனம் செய்து கொண்டது
போதும்.
இனிப் புறப்படு.

இது எம் தாயகம்
உனது தாயகமும்கூட
சீருடையில்
இருப்பவனின் அளவுக்கு



உனக்கும்
கடமைகள் இருக்கின்றன.

கார்காலம் வந்து விட்டால்
குடையுடன் வெளிக்கிடுகிறாய்
போர்க் காலமே வந்து விட்டது

உன் கரங்களில்
ஆயுதம் தரிக்க - ஏன்
இத்தனை தயக்கம்?

நீ நிற்பது,
சிரிப்பது, விமர்சிப்பது கூட
எல்லையில்
உரமாகிக் கொண்டிருக்கும்
அவர்களின்
குருதிக்கும், உயிற்கும் மேல்
நின்றென்பதை சிந்தி.

ம் ம்... எழுந்து விடு
புகுந்து விடு நம் பாசறை
செந்தழல் விழிகளுடன்
புறப்படு புதிய புயலாக
தாயக விடியலின்
சாவிக் கொத்துக்கள்
உனது கையிலும் தான்...

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழீழ விடுதலைப்புலிகள் | T.C.C | T.C.C | தமிழீழ விடுதலைப்புலிகள் | TAMIL CO-ORDINATING COMMITTEE |
| பிரித்தானியக் கிளை | P.O.BOX 1699 Vika | 341 Rue Des Pyrenees | ஜேர்மன் கிளை | VIA MARIANO STABILE - 34 |
| 54,TAVISTOCK PLACE | 0110 OSLO - 1 | 75020 PARIS | P.O.BOX 1132 | 90139 PALERMO |
| LONDON WC1H 9RG | NORWAY | FRANCE | 5172 LINNICH | ITALY |
| TEL:071 837 7162 | TEL:02 191260 | TEL:435 81142 | GERMANY | TEL/FAX: 091-6113179 |
| FAX:071-278 5666 | FAX:02 190114 | FAX:435 81191 | | |

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்